விலை: 60.00
பக்கங்கள் - 24 + II
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 26
ஒலி 143 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 28 ஞாயிற்றுக்கிழமை (11.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சி அமைக்க புரிந்துணர்வு அடிப்படையில் ஆதரவு

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சி அமைக்க புரிந்துணர்வு அடிப்படையில் ஆதரவு வழங்கத் தயார் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நடந்துமுடிந்த பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசிய பாதையிலிருந்து தமிழ் மக்கள் படிப்படியாக விலகி வருகின் 23ஆம் பக்கம் பார்க்க

## குருந்தூரில் பிக்கு அடாவடி
## விவசாயிகள் மூவர் கைது

### தொல்லியல் திணைக்களம், பௌத்த பிக்கு தலையிட்டதையடுத்து பொலிஸார் நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு குருந்தூர்மலை அடிவாரத்தில் தமது சொந்த நிலத்தில் விவசாயத்தில் ஈடுபட்ட மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். பௌத்த பிக்கு, தொல்லியல் திணைக்களத்தினர் தலையிட்டதையடுத்து பொலிஸார் குறித்த மூன்று விவசாயிகளையும் கைது செய்துள்ளனர். (04ஆம் பக்கம் பார்க்க)

## வெசாக்கை முன்னிட்டு
### 388 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

(கொழும்பு)

வெசாக் பண்டிகையை முன்னிட்டு 388 சிறைக் கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் பொது 23ஆம் பக்கம் பார்க்க

- வியாசர் பதில்கள்
- ஆச்சி அறிவுரை
- கவிதைக் கலசத்துடன்

இன்னும் பல அம்சங்களுடன்
உங்கள்
சங்குநாதம்
உள்ளே

## இந்தியா - பாகிஸ்தான் உடனடி போர் நிறுத்தத்துக்கு ஒப்புதல்



(டில்லி)

இந்தியா மற்றும் பாகிஸ்தான் அரசாங்கங்கள் உடனடிப் போர் நிறுத்தத்துக்கு ஒப்புக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவும் பாகிஸ்தானும் முழுமையான மற்றும் உடனடி போர்நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளதாகப் பாகிஸ்தான் துணைப் 23ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.அச்சுவேலியில்
## உணவக உரிமையாளர் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் உணவக உரிமையாளர் ஒருவர் மீது இனம் தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். தாக்குதலில் காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாக உணவகமொன்றினை நடத்தி வரும் சின்னையா ஆலாலசுந்தரம் 23ஆம் பக்கம் பார்க்க

## பொதுக் கோட்பாட்டில் இணங்கி ஆதரவளியுங்கள்

### தமிழ்க் கட்சிகளிடம் சுமந்திரன் கோரிக்கை

(வவுனியா)

ஒரு சபையில் குறித்த ஒரு கட்சிக்கு கூடுதலான ஆசனங்கள் இருந்தால் அந்தக் கட்சிக்கு நிர்வாகத்தை அமைக்கக்கூடிய ஒரு உரிமை பொதுவாக இருக்கும். அந்தக் கோட்பாட்டிற்கு இணங்கி ஆதரவளிக்குமாறு தமிழ்க் கட்சிகளிடம் விநயமாகக் கோருவதாக தமிழரசுக் கட்சியின் செய 23ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டியில் இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தையிட்டியில் கட்டப்பட்டுள்ள சட்டவிரோத விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று போராட்டம் முன்னெ 23ஆம் பக்கம் பார்க்க

### தமிழர் நிலத்தில்
## தமிழ்க் கட்சிகளே சபைகளை நிர்வகிக்க வேண்டும் - சுரேஸ்

(யாழ்ப்பாணம்)

தமிழர் நிலத்தை தமிழரே ஆட்சி செய்ய வேண்டும் என்ற தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் ஆட்சியை அனைத்து தமிழ்க் கட்சிகளும் இணைந்து நிர்வகிக்க வேண்டும் என்ற தீர்ப்பையே தமிழ் மக்கள் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் மூலம் வழங்கியுள்ளனர் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித் 23ஆம் பக்கம் பார்க்க

# மரண அறிவித்தல்

## இளையதம்பி சிவஞானம் (CTB)



பொலிகண்டி வீரபத்திரர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சிவஞானம் அவர்கள் நேற்று (10.05.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பு - பதுமை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசகாந்தம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அம்மா, பொன்னம்பலம், இராசரத்தினம் மற்றும் நேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் விமல்ராஜ் (பொறுப்பதிகாரி - மருந்து விநியோகப் பிரிவு, யாழ்ப்பாணம்), சிவகாந்தன் (ஆசிரியர்), சிவவாசன் (தபால் உத்தியோத்தர்), சபேசன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), ரங்கா (இத்தாலி), சுரேகா (உப தபால் அதிபர்), இராகுலன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜிதா, பாமிலா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), மாதவி, ஜெயக்குமார் (இத்தாலி), நிதர்சினி (வைத்தியர்), பிரகாஸ் (மக்கள் வங்கி உத்தியோகத்தர்), குவேனி (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து, பசுபதி, வீரகத்தி மற்றும் லீலாவதிஅம்மா, கமலாதேவி, கணேசன் (ஓய்வு பெற்ற உபதபால் அதிபர்), இராஜசேகரன் (ஓய்வு பெற்ற உபஅதிபர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற பீதாம்பரம் (பனை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்), மணிமேகலை, தவேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் விதுசன், அம்சானி, ஆரணிகா, ஆரபி, டெய்சன், ஆகாஸ், திசானன், அனந்திகா, அனிருத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2025) ஞாயிற்றுக்கிமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளம்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வீரபத்திரர் கோவிலடி,
பொலிகண்டி தெற்கு,
வல்வெட்டித்துறை.

077 455 2208
077 989 7813
077 315 1994

(C-2942)

தகவல் :
குடும்பத்தினர்

## வாடகைக்கு வீடு தேவை

யாழ்ப்பாணம் இந்து மகளீர் கல்லூரிக்கு அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் ஒன்று வசிக்கக் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு ஒன்று வாடகைக்குத் தேவைப்படுகின்றது.

(C-2943)

**077 439 2084**

## பஸ் விபத்து 20 பேர் படுகாயம்

வெலிமடை பிரதேசத்தில் நேற்று இரவு நடைபெற்ற பேருந்து விபத்தொன்றில் 20 பேர் காயமடைந்துள்ளனர்.

பண்டாரவளையில் இருந்து வெலிமடை நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று டயரப பிரதேசம் அருகே பள்ளத்தாக்கு ஒன்றில் கவிழ்ந்து இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக தற்போதைக்கு 20 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு, டயரப மீராவத்தை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 08 பேரின் நிலை கவலைக்கிடமாக இருந்த காரணத்தினால் வெலிமடை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறியுள்ளனர். (ம-4,7)

## நம்பினால் நம்புங்கள்

அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

(4149)

**காயத்திரி திருமண சேவை**

கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக ரூபி விலாஸ்

**077 844 9861, 076 776 3291**

## மில் வேலைவாய்ப்பு

கரன் மில்ஸ், அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

எங்கள் நிறுவனத்திற்கு பொறுப்புள்ள வேலையாட்கள் தேவை.

எண்ணெய் ஆலை, அரிசி/மாவு பிரிவு, தூள் தயாரிப்பு உதவியாளர், காசாளர்

வேலை செய்ய விருப்பமுள்ளோர் தொடர்புகொள்ள :

**075 284 1929**

(1125)

## வேலையாட்கள் தேவை

எமது தளபாட நிலையத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் உடன் தேவை.

- ♦ தச்சு வேலையாட்கள் 90000/=
- ♦ மேற்பார்வையாளர் 35000/=
- ♦ தளபாட பெயின்ரர் 75000/=
- ♦ வேலை பழக விரும்புவர்கள் 25000/=

தங்குமிட வசதியும், நிரந்தரமான வேலையும் உண்டு.

**ஆர்க் தளபாட நிலையம்**

இல.35, கொட்டைக்காடு வீதி, கோண்டாவில் கிழக்கு (பஸ் டிப்போ அருகாமை)

T.P : 021 221 9909, 077 300 1763

(4155)

## கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ-து A9 வீதி பரந்தன்

### பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்

எமது சங்கத்தில் வெற்றிடமாக உள்ள பொதுமுகாமையாளர் பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பப் படிவத்தினை சங்க வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் தலைவர் கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து) - A9 வீதி பரந்தன் எனும் முகவரிக்கு 2025.05.28ம் திகதிக்கு முன்னர் நேரில் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

| | |
|---|---|
| பதவி | :- பொதுமுகாமையாளர் |
| சம்பளக் குறியீட்டு இல | :- 101/07 |
| சம்பள அளவுத்திட்டம் | :- 21,125-275X10-300×10-26,875.00 |
| (கூ.ஊ.ஆ.சு.நி இல 02/2022) | 253,500-3300×10-3600×10-322,500.00 |

இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கைகளுக்கு அமைய இதர படிகளும் வழங்கப்படும்.

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 8 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./கூட்டுறவு ஊழியர் 9 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். **அல்லது**

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம்/ அதற்குச் சமனான தகைமை. இத்தகைமையானது கணக்கியல்/ வியாபாரப் புள்ளி விபரவியல்/ வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்/ இலங்கைத்தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/முகாமைத்துவம் வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பரீட்சையில் சித்தி..**அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை நிலைப் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்./க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

**பொதுவான நிபந்தனைகள்**

1. வயது 2025.05.26ம் திகதியில் 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
2. சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
3. தங்களால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்வித் தகமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்துதல் நற்சான்றிதழ் தேசிய அடையாள அட்டை என்பவற்றினை உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
4. நியமனத்தின் போது சுற்று நிருபத்திற்கு அமைவாக ரொக்க பிணை செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.
5. கூட்டுறவுச் சங்கங்களில் கடமை புரிபவர்கள் குறித்த சங்கத்தின் ஊடாக விண்ணப் படிவம் அனுப்புதல் வேண்டும்.
6. விண்ணப்ப முடிவுத்திகதி 28.05.2025

(C-2941)

# மரண அறிவித்தல்

மலர்வு
16 - 04 - 1957



உதிர்வு
08 - 05 - 2025

## பொன்னையா நாகேஸ்வரா

கொடுக்குளாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நாகேஸ்வரா அவர்கள் 08.05.2025 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் பொன்னையா - சிவகாமசுந்தரி தம்பதியரின் அன்பு மகனும் இராசேந்திரம் - செல்லப்பாக்கியம் தம்பதியரின் மருமகனும் ஜெயதேவியின் அன்புக் கணவரும் மைனாவதி, அமராவதி (அமரர்), யோகராசா (அமரர்), வனிதாதேவி (அமரர்), கமலாதேவி(அமரர்), பிறாமலதா, ரவிச்சந்திரன், ரகுநேசன், நிர்மலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயமலர், பாலமனோகரன்(அமரர்), ஜெயலலிதா, ஜெயரஞ்சன், ஜெயறஞ்சனா, ஜெயசாந்தன், ஜெயசுதா ஆகியோரின் மைத்துனரும் அமுதகாசன், அமுதசுமணா (அமரர்), அருள்தாசன், அருள்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகரதி, சர்மினி, சங்கீத்தா ஆகியோரின் மாமனாரும் அன்பினி, அறிவினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 11.05.2025 ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் உடுத்துறை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-2944)

தகவல் :
குடும்பத்தினர்

# பாதாள உலகக் கும்பல்களுக்கும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கும் தொடர்பு!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அதிர்ச்சித் தகவல்



(கொழும்பு)

**எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கும் பல பாதாள உலகக் கும்பல்களுக்கும் இடையிலான தொடர்புகள் இருப்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஒன்பது வேட்பாளர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எட்டு வேட்பாளர்கள், மக்கள் கூட்டணியின் நான்கு வேட்பாளர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்று வேட்பாளர்கள் மற்றும் சர்வஜன அதிகாரத்தின் ஒரு வேட்பாளர் ஆகியோர் அடங்குவதாக அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சமீபத்திய கொலைகளின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டதாகக் குற்றம் சாட்டிய எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக அமைச்சர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

அதன்போது, தற்போதைய தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, அரசாங்கம் பாதாள உலகக் கும்பல்களை ஒழிக்கும் என்று கூறினார், ஆனால் அது நடப்பதாகத் தெரியவில்லை," என்று தயாசிறி குற்றஞ் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## இலங்கை- இந்திய பாராளுமன்ற நட்புறவு சங்கத் தலைவராக அமைச்சர் நளிந்த



(கொழும்பு)

சுகாதாரம் மற்றும் ஊடகத் துறை அமைச்சரும் அரசாங்கத்தின் தலைமை அமைப்பாளருமான நளிந்த ஜெயதிஸ்ஸ, பத்தாவது பாராளுமன்றத்திற்கான இலங்கை - இந்திய பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

பாராளுமன்ற தொடர்புத் திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது. நட்புறவு சங்கத்தின் கூட்டம், கடந்த 8 ஆம் திகதி அன்று பாராளுமன்றத்தில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவின் தலைமையில் நடைபெற்றது. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலிஹ், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் திருமதி குசானி ரோஹணதீர ஆகியோரும் கலந்து கொண்டனர். (நி-8)

## விசேட சுற்றிவளைப்பில் 359 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப் பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது போதைப் பொருட்களுடன் 359 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 129 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 133 பேரும், கஞ்சா போதைப் பொருளுடன் 94 பேரும், கஞ்சா செடிகளுடன் 3 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 166 கிராம் 220 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 176 கிராம் 446 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 4 கிலோ 142 கிராம் 135 மில்லிகிராம் கஞ்சா போதைப் பொருளும், 12534 கஞ்சா செடிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (நி-8)

## மது போதையில் சாரத்தியம் சாரதி உயிரிழப்பு



(கொழும்பு)

குளியாப்பிட்டிய - மாதம்பே வீதியில் பலுகமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 25 மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டு அருகிலிருந்த வீடொன்றின் இரும்பு நுழைவாயில் மற்றும் மின் கம்பத்தின் மீது மோதி பின்னர் மற்றுமொரு வீட்டின் கிணற்றின் மீது மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த காரின் சாரதி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகவும் விபத்தின் போது காரின் சாரதி மதுபோதையில் இருந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)


## சேவை நலன் பாராட்டு

திருமதி.

**சிவகலா சண்முகராஜா**

(B.A., Dip.in music, Dip.in Edu.)

*(சேவைக்காலம் - 35 வருடங்கள்)*

சேவை விபரம்

- யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் (03.01.1990–30.09.1998)
- யா/கொக்குவில் இந்துக் கல்லூரி (01.10.1998–16.02.2010)
- யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் (17.02.2010–18.02.2020)
- யா/வைத்தீஸ்வரா கல்லூரி (19.02.2020–10.05.2025)




எமது கல்லூரியில் **இந்து நாகரிக பாட** ஆசானாய் சிறப்புடன் பணியாற்றி உள மகிழ்வுடன் பணி நிறைவு காணும் இந் நன்னாளில் உங்களைப் பாராட்டுவதோடு உங்கள் ஓய்வு காலம் சிறப்புற அமைய இறை ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

*வாழ்த்துவோர்-* ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்.

# ஜொலிபாஸ் கூடைப்பந்தாட்டத் தொடர் இன்று ஆரம்பம்




(யாழ்ப்பாணம்)

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் ஒழுங்குபடுத்தலில் யாழ்.இந்துவின் மாணவர்கள், பழையமாணவர்களை ஏலம் மூலம் அணிகளாக பிரித்து நடாத்தப்படும் மாபெரும் ஜொலிபாஸ் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் ஆரம்பமாகிறது.

இந்த ஜொலிபாஸ் கூடைப்பந்தாட்டத் தொடரில் கடந்த வருடம் நடைபெற்ற முதலாவது தொடரை மஞ்சுதன் தலைமையிலான Jolly Kings அணி கைப்பற்றி சம்பியனாகியிருந்தது.

இந்த வருடமும் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றும் நம்பிக்கையோடு மஞ்சுதன் தலைமையில் நிசனன், அனுசன், சர்மிலன், கஜீபன், சங்கீர்த்தன், ஹரி, நிசாந்தன், திவ்வியப்பிரியன், துவார்சன், ராஜா, கபிலன், சரணியன், சீரோன், ஆதிரன் ஆகிய நட்சத்திர வீரர்களை உள்ளடக்கிய பலமான அணியாக களமிறங்குகிறது.

இன்று மாலை 6 மணிக்கு தனது முதலாவது போட்டியில் Jolly Kings அணி JOLLY RUSTY BOYS அணியினை எதிர்த்தாடவுள்ளது. (ம-4,7)

# டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக ரோஹித் அறிவிப்பு

டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் ரோஹித் சர்மா நேற்று முன்தினம் அறிவித்துள்ளார். ஓய்வு குறித்து ரோஹித் கூறுகையில்,

“நான் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறேன். இதை எல்லோருடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். தேசத்துக்காக வெள்ளைச் சீருடையில் விளையாடியது மிகப் பெரிய கௌரவம்.

உங்கள் அனைவரின் அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி.

தொடர்ந்து ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் இந்தியாவிற்காக விளையாடுவேன்” என இன்ஸ்டாகிராமில் ரோஹித் தெரிவித்துள்ளார்.

ரோஹித் தலைமையில் இந்திய அணி, 24 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி உள்ளது. அதில் 12 வெற்றி மற்றும் 9 தோல்விகளைப் பெற்றுள்ளது. (6-8)

## குருந்தூரில்...

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், குருந்தூர் மலையில் கீழாக தமிழ் மக்களுக்குச் சொந்தமான பல நூற்றுக்கணக்கான நிலங்களைப் பௌத்த பிக்கு தொல்லியல் திணைக்களத்தின் துணையோடு ஆக்கிரமித்து வைத்துள்ளார்.

இந்தக் காணிகளுக்கு அண்மையாக நேற்றுக் காலை குமுழமுனை தண்ணிமுறிப்பு குளத்தின் கீழான நீர்ப்பாசனத்தின் ஊடாக விவசாயம் செய்யும் நோக்கில் குறித்த காணியின் உரிமையாளர் சசிகுமார் என்பவர் தனது பணியாட்கள் மூலம் உழவு செய்துள்ளார். இதன்போது அவ்விடத்துக்கு வருகை தந்த குருந்தூர்மலை பௌத்த பிக்கு கல்கமுவ சாந்த போதி மற்றும் தொல்லியல் திணைக்களத்தினர், பொலிஸார் இணைந்து விவசாய நடவடிக்கைகளைத் தடுத்ததோடு விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மூன்று விவசாயிகளை உழவு இயந்திரத்துடன் கைது செய்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

குறித்த காணியின் உரிமையாளர் சசிகுமார் இருதய நோய்க்குச் சிகிச்சை பெறுவதற்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவரின் பணியாளர்கள் மூலமாக விவசாய நடவடிக்கைக்கு ஆயத்தங்களை மேற்கொண்ட போதே இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு பணியாளர்களான விவசாயிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-4,7,299)

*(மற்றுமொரு செய்தி உள்ளே)*

# ரசிகர்களின் டிக்கெட் கட்டணங்கள் திருப்பியளிப்பு




ஐ.பி.எல் தொடர் அடுத்த ஒரு வாரத்துக்கு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதால் ரசிகர்களுக்கு டிக்கெட் கட்டணத்தை திருப்பியளிக்கும் பணியை அணிகள் தொடங்கியுள்ளன.

ஐ.பி.எல் தொடர் ஒரு வாரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதையடுத்து ஐ.பி.எல் தொடருக்காக ரசிகர்களிடம் பெற்ற டிக்கெட் கட்டணத்தை திருப்பியளிக்கும் பணியை சன்ரைசர்ஸ் ஹைதராபாத் மற்றும் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் தொடங்கியுள்ளன.

இது தொடர்பாக லக்னோ அணி நிர்வாகம் அதன் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது, எக்னா திடலில் நடைபெறவிருந்த ஐ.பி.எல் போட்டி இரத்து செய்யப்பட்டுள்ளது. இந்தப் போட்டிக்காக ரசிகர்கள் வாங்கிய டிக்கெட் கட்டணத்தை திருப்பியளிக்கும் பணிகள் தொடங்கியுள்ளன எனப் பதிவிடப்பட்டுள்ளது.

அதேபோல, சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி நிர்வாகம் தரப்பில் அதன் எக்ஸ் பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளதாவது, இந்தியாவில் தற்போதுள்ள பதற்றமான சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, டாடா ஐ.பி.எல் தொடர் உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது. ஹைதராபாதில் நடைபெறவுள்ள போட்டிக்காக ரசிகர்களிடம் பெற்ற டிக்கெட் கட்டணத்தை திருப்பியளிக்கும் பணிகள் உடனடியாக தொடங்கப்படும் எனப் பதிவிடப்பட்டுள்ளது.

ஐ.பி.எல் தொடரில் இதுவரை 58 போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில், மீதம் 16 போட்டிகள் எஞ்சியிருப்பது குறிப்பிடத்தக்கது. (6-8)




உ
ஓம்
அம்மன் துணை

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் பரிபாலன சபை

## பகிரங்க ஏல விற்பனை

பின்வரும் பொருட்கள் ஏலத்தில் விடப்பட உள்ளது

- வெங்கல குத்துவிளக்கு (2') - 59
- வெங்கல குத்துவிளக்கு (6') - 167
- வெங்கல குத்துவிளக்கு (1½') - 31
- சில்வர் குத்துவிளக்கு (1') - 108

பொருட்களை கிழமை நாட்களில் காலை 09.00 - மாலை 04.00 மணிவரையில் பார்வையிட முடியும். எதிர்வரும் 17.05.2025 காலை 09.00 மணிக்கு ஆலயத்தில் ஏலம் விடுதல் இடம்பெறும்.

தலைவர் (C-2945) செயலாளர்




# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 550 | 600 | 400 | 600 |
| உருளைக்கிழங்கு | 220 | 230 | 200 | 280 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 200 | 200 |
| தக்காளி | 1200 | 1200 | 1000 | 1000 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 290 | 300 | 200 |
| கோவா | 550 | 500 | 500 | 600 |
| கரட் | 850 | 950 | 1000 | 1000 |
| பூசணி | 180 | 200 | 200 | 200 |
| புடோல் | 300 | 250 | 300 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 130 | 200 |
| பாகற்காய் | 1200 | 1400 | 600 | 1000 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 500 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 400 |
| பயற்றங்காய் | 400 | 400 | 350 | 400 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 600 | 600 | 600 | 600 |
| கறிமிளகாய் | 650 | 800 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 2500 | 3000 | 2000 | 2000 |
| போஞ்சி | 800 | 1000 | 600 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 500 | 500 | 400 | 500 |
| கீரை – 1 பிடி | 150 | 80-150 | 150 | 120 |
| தேசிக்காய் | 350 | 400 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 260 | 150 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 600 |
| வெங்காயப்பூ | -- | 500 | 600 | 600 |
| முள்ளங்கி | 150 | 200 | 200 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 150 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | -- |

## கடைக்கட்டடம் வாடகைக்கு

கோண்டாவில் கிழக்கு,ராஜா பிளாசா கட்டடத்தொகுதியில் 24X45(1080 சதுர அடிகள், 12X45(540 சதுர அடிகள்) விஸ்தீரணம் கொண்ட இரண்டு கடைகள் வாகனத்தரிப்பிட வசதியுடன் வாடகைக்கு உண்டு. இரண்டு கடைகளையும் ஒன்றாகவும் பயன்படுத்தலாம் பூட்சிற்றி, அரச, தனியார் நிறுவனாங்களுக்கு உகந்தது. (4138)

தொடர்புகளுக்கு :- இல.74A, பலாலி வீதி, கோண்டாவில்
தொ.இல :-077 615 9631



## WE ARE HIRING

### பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

புதிய கட்டுமான வேலைத்தளம் கடற்கரை வீதி, கொழும்புத்துறை. (சி-144)

தொடர்புகளுக்கு :- 077 003 2657
077 614 1645


# களைகட்டும் வெசாக் பண்டிகை



(கொழும்பு)

வெசாக் பண்டிகையை முன்னிட்டு கொழும்பு மாவட்டத்தில் 23 வெசாக் தோரணங்கள் கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

"நல்ல குணங்களைக் கொண்ட உன்னத மக்களுடன் பழகுவோம்" எனும் தொனிப் பொருளில் இந்த ஆண்டில் தேசிய வெசாக் பண்டிகை கொண்டாடப்படுகின்றது.

அதன்படி, நேற்று சனிக்கிழமை முதல் எதிர் வரும் 16 ஆம் திகதி வரை வெசாக் வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் 7,200 வெசாக் தானங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-8)


## முதியோர் பராமரிப்பு

முதியவர்கள் பராமரிப்பு சேவை மேற்கொள்ளப்படும். எதுவித முற்பணமும் பெறப்படமாட்டாது. (4147)

தொடர்புகளுக்கு:- 077 069 3486
077 442 9869
whatsapp :- 077 024 2031




## ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்- ஏழாலை



12.05. 2025 நாளை திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு மகா சமாதி நிலையடைந்த

**நல்லை ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமி**

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் விசேட தேவைக்குட்பட்டோருக்கான உதவித்திட்டங்கள் வழங்கும் நிகழ்வும், வறிய மாணவர்களுக்கான உதவி வழங்கல் மற்றும் திருமுறைப் பாராயணம் செய்தல் நிகழ்வும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்குதல் இடம்பெற்று அன்னதானத்துடன் நிறைவு பெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

இங்ஙனம்- தேவஸ்தானம் (4150)

## கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 15 - 01 - 1962



விண்ணில் 08 - 05 - 2025

### அமரர். தம்பிராசா அம்பலவாணர்

(ஓய்வு நிலை அதிபர், யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

சந்தமும் தவள் புன்னகை
சந்திரன் நிகர் தண்ணளி- யார்
வந்ததும் அரவணைக்கும் மாண்பாளா!
வந்ததோ இடரெமக்கு
வந்திடாதோ இறப்பு காலனுக்கு?
காத்திருந்தே காலமெலாம் அஞ்சலிப்போம் உமக்கு.
ஓம்சாந்தி.. ஓம்சாந்தி... ஓம்சாந்தி.... (சி-2938)

பாடசாலைச் சமூகம்,
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

# இராசிபலன்

11.05.2025
சித்திரை 28, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 8.32மணிவரை

சுவாதி முழுவதும்
சுபநேரம் 8.54-10.24 மணிவரை
இராகுகாலம் 4.24-5.54 மணிவரை

சர்வதேச அன்னையர் தினம்
சந்திராஷ்டமம்- ரேவதி.

வள்ளுவன்



மேஷம்

சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.



ரிஷபம்

கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.



மிதுனம்

வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.



கடகம்

விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், பயணங்களால் பலனுண்டு.



சிம்மம்

உறவினர்கள் உங்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவர், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.



கன்னி

உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.



துலாம்

சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செலவிற்கேற்ப வருமானம் கிடைக்கும், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.



விருச்சிகம்

பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பயணங்களால் பலனுண்டு, காரியங்களில் வெற்றிபெற கணபதியை வழிபட வேண்டிய நாள்.



தனுசு

அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.



மகரம்

பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



கும்பம்

பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், எதிர்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், உறவினர்களின் சந்திப்புண்டு.



மீனம்

குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலையுண்டு, புதிய முயற்சிகளை யோசித்து ஏற்பது நல்லது.

**அஞ்சாதவனும் ஆசைப்படாதவனுமே உயர்ந்த மனிதர்கள்.**

# நோயாளியின் தகவல் தெரிந்தால் தெரியப்படுத்துங்கள்

## யாழ்.போதனாவின் பிரதிப் பணிப்பாளர்



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளி தொடர்பில் தகவல் தெரிந்தால் தெரியப் படுத்துமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி.யமு னானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்தி குறிப் பிலே இவ்வாறு தெரிவிக்கப்பட் டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளதாவது, யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கடந்த 5 ஆம் திகதி அன்று மாலை 2 மணியளவில் 1990 நோயாளர் காவு வண்டி மூலம் சுமார் 77 வயது மதிக்கத்தக்க முதியவர் தலைக் காயத்துடன் அனுமதி க்கப்பட்டு அவரிற்கு அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. தற்போது இவர் தனது விபரங் களை முழுமையாக கூறமுடி யாத நிலையில் உள்ளார்.

இவர் தனது பெயர் இராம நாதன் தவராசா என இடை யிடையே கூறுகின்றார். தான் ஒரு நீர்வறியோக முகாமை யாளர் எனவும் குலநாயகம் முருகமூர்த்தி என்ற பெயரை யும் அழைக்கின்றார். தனக்கு இரண்டு பிள்ளைகள் என்றும் ஒரு பிள்ளை வெளிநாட்டில் என்கின்றார்.

தனது இடம் காரைநாகர் எனவும் குறிப்பிடுகின்றார். இந் நோயாளியின் உறவினர்கள் தயவுசெய்து யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப் பாளர் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு இம் முதியவர் சிகி ச்சை முற்றுப்பெற்ற பின் உற வினர்களுடன் இணைந்து கொள்ள உதவுமாறு யாழ். போதனா வைத்தியசாலை யின் பிரதிப் பணிப்பாளர் வைத் தியர் சி.யமுனானந்தா தெரி வித்தார். (6-8)

## ஸ்கந்தபுர ஏற்று

# நீர்ப்பாசன மின் உற்பத்திக்கு

## அனுமதி வழங்குமாறு கோரிக்கை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஸ்கந்தபுரம் ஏற்று நீர் பாசனத் திட்டத்தை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேத நாயகன் கடந்த வியாழக்கி ழமை சென்று பார்வையிட்டார்.

இதன்போது ஸ்கந்தபுரம் ஏற்று நீர்பாசனத் திட்டத்துக்காக அமைக்கப்பட்ட மற்றொரு தொகுதி சோலர் பனலுக்கான இணைப்பு இலங்கை மின்சார சபையால் வழங்கப்படவில்லை என்ற விடயம் ஆளுநருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

கூரைமேல் சோலர் பனல் பொருத்தப்படவில்லை என்றும் நீரோட்டத்தின் மேலேயே சோலர் பனல் பொருத்தப்பட்டுள் ளமையாலேயே அந்த அனு மதி வழங்கப்படவில்லை என வும் இலங்கை மின்சார சபை யால் இதன்போது ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்ல ப்பட்டது.

தற்போது அதற்கு தீர்வு காணும் வகையில் கட்டடம் அமைப்பதற்கான கேள்வி கோரல் வெளியிடப்பட்டு நடவ டிக்கை எடுக்கப்பட்டு வருவதா கவும், அதனை நிறைவு செய் வதற்கு காலம் தேவை என் பதால் அதுவரையான காலத் தில் சோலர் பனல் ஊடான மின்உற்பத்தியை கொள்வ னவு செய்வதற்குரிய அனும தியை மின்சார சபையால் வழ ங்குவதற்கு நடவடிக்கை எடுக் குமாறு ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அது தொட ர்பில் மின்சார சபையுடன் கலந் துரையாடுவதாக ஆளுநர் தெரி வித்தார்.

இதன் பின்னர் ஸ்கந்தபுரம் ஏற்று நீர்பாசனத் திட்டத்தில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் தோட்டங்களையும் ஆளுநர் சென்று பார்வையிட்டார்.

கிளிநொச்சி மாவட்டச் செய லர், திட்டமிடல் பணிப்பாளர், நீர்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர், இலங்கை மின் சார சபையின் பொறியியலாளர் ஆகியோர் பங்கேற்றனர். (6-8)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்ரீ கதிர மலை சிவன் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 13 தினங்கள் இடம்பெறவுள்ளது.

இம் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சப்பறத்திருவிழா வும், 25 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணி க்கு தேர்த்திருவிழாவும், 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை தீர்த்தோற்சவமும் அன்று மாலை கொடியி றக்கமும் இடம்பெற்று 28 ஆம் திகதி புதன்கிழமை மாலை திருக்கல்யாண உற் சவமும் இடம் பெறவுள்ளது என தேவஸ்தான பிரதம குரு கலாநிதி சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக் குருக் கள் தெரிவித்துள்ளார். (3-8)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

விதையனைத்தும் விருட் சமே செயற்றிட்டமும் Delvan Assistance for Social Harmony நிறுவ னமும் இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாங் குளம், முல்லைத்தீவு வீதி, ஒலுமடுச்சந்தியில் உள்ள Delvan Assistance for social Harmony நிறுவ னத்தில் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை இடம்பெறவுள்ளது என ஏற் பாட்டாளர்கள் தெரிவித்துள் ளனர். (3-8)

## வில்லூன்றியின் சித்திரா பூரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய சித்திரா பூரணைப் பெருவிழா நாளை திங்கட்கிழமை வில் லூன்றி புனித தீர்த்தத்தில் இடம்பெறவுள்ளது. வில்லூ ன்றி விநாயகராலயத்தில் அதிகாலை விசேட அபி ஷேகம், பூசைகளும், காலை ஏழு மணிக்கு வசந்தமண்டப் பூஜையும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் காலை எட்டு மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடை பெற்ற பின் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்த மாடவும் பிதிர்த்தர்பணங்கள் செய்து கொள்ளவும் ஏற்பாடு கள் செய் யப்பட்டுள்ளதாகவும் ஆலய தர்மகர்த்தாவும் முகா மையாளருமாகிய இ.குமார வடிவேல் தெரிவித்துள் ளார். (3-8)

# சீரணி அம்பாளுக்கு நாளை தேர்த்திருவிழா



(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து இடம்பெற்று வரும் மஹோற்சவங்களில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இரதோற்சவம் இடம்பெற்று நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நாகபுஷ்கரணி தீர் த்தத்தடாகத்தில் தீர்த்தோற் சவமும் அன்று மாலை கொடி யிறக்க உற்சவமும் இடம்பெற வுள்ளது என ஆலய தர்ம கர்த்தா சபையினர் தெரிவித்து ள்ளனர். (3-8)

# ‘நெய்தல் சூழல் நேய பூங்கா’ மண்டைதீவில் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் அமைக் கப்பட்டுள்ள “நெய்தல் சூழல் நேய பூங்கா” நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண ஆளுநரி னால் திறந்து வைக்கப்பட் டது.

நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர், இங்கு அமைக்கப் பட்டுள்ள பூங்கா போன்று பல வேலைத் திட்டங்கள் எதிர் காலத்தில் முன்னெடுக்கப்படும் என நம்புகின்றேன். அத்துடன் இந்தப் பிரதேசத்தில் இவ்வா றான முயற்சியை மேற் கொண்டுள்ள நெய்தல் சூழல் நேயப் பூங்காவின் நிறுவுனர் சி.அனுராஜ்க்கும் பாராட்டுக் கள் எனத் தெரிவித்தார்.

இந்தப் பூங்கா 2 ஆண்டு களில் 7 கட்டங்களாக அபி விருத்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# காணிப் பிணக்கு தொடர்பில் கிளிநொச்சியில் நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்டகாலம் தீர்க்கப்படாதுள்ள அரச காணிகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் காணி நடமாடும் சேவை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியா ழக்கிழமை இடம்பெற்றது.

நடமாடும் சேவையில் கிளிநொச்சி மாவட்ட பதில் செயலர் சு.முரளிதரன், கிளி நொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் திருமதி நளாயினி இன்பராஜ், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமை ச்சின் செயலரும், காணி ஆணையாளருமான அ.சோதி நாதன், கரைச்சிமற்றும் பூநகரி பிரதேச செயலர்கள், காணி ஆணையாளர் அலுவலக உத் தியோகத்தர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

காணிப் பிணக்குத் தொடர் பில் ஏற்கனவே வழங்கப்பட்ட இணக்கப்பாட்டை ஏற்றுக்கொள் ளாமல் ஆளுநருக்கு முறைப் பாடுகள் மேற்கொள்ளப்பட்டிரு ந்தமையையடுத்தே, காணி நடமாடும் சேவை நடத்தப்பட்டி ருந்தது. இதன்போது சட்ட மற் றும் நிர்வாக நடைமுறைக்கு அமைவாக தீர்வுகள் வழங்கப் பட்டிருந்தன. பெரும்பாலான தரப் பினர்கள் அதனை ஏற்றுக் கொண்டிருந்தனர். தீர்வுகளை ஏற்றுக் கொள்ளாதவர்களை நீதிமன்றை நாடுமாறும் ஆலோசனைகள் வழங்கப் பட்டன. உறவினர்களிடையே யான காணிப்பிணக்குகளே அதிகம் என்பது குறிப்பிடத் தக்கது. (6-8)

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 492
11.05.2025


# தமிழ் மக்களின் விருப்பை உணர்ந்து ஒற்றுமைப்படுமா தமிழ்த் தேசியக் கட்சிகள்!

அபிமன்யு

அன்றைய நெருக்கடி மிக்க காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி என்பது மிகப் பெரும் எழுச்சியாக இருந்தது. அது தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற பெரும் பிம்பத்தை சர்வதேசத்திற்கு பறை சாற்றியிருந்தது. தமிழ் மக்களின் ஒட்டுமொத்த ஆதரவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கே என்ற சிந்தனை தமிழினத்தின் ஒற்றுமையை உலகிற்கு எடுத்துக்காட்டி உயர்ந்து நின்றது.

2009 ஆம் ஆண்டு பயங்கரவாதத்திற்கு எதிரான போர் எனத் தொடுக்கப்பட்ட போரில் இலட்சக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். போரின் கோரத் தாண்டவம் நாளுக்கு நாள் இறப்பு எண்ணிக்கையை அதிகரித்த வண்ணமிருந்த நேரங்களில் தமிழ்த் தலைவர்கள் எவரும் போரை நிறுத்தக்கோராமல் அமைதியாக இருந்தமை ஆச்சரியமான விடயம்.

போர் நிறைவடைந்ததாயும் பயங்கரவாதம் கூண்டோடு அழிக்கப்பட்டதாலும் அன்றைய ராஜபக்ச அரசு கூறிய போது, அல்ல போரில் அப்பாவிப் பொதுமக்கள் இலட்சக் கணக்கில் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். இது ஒரு திட்டமிட்ட இன அழிப்பு என எந்தத் தமிழ்த்தரப்பும் கூறாது மௌனமாய் இருந்தது. விடுதலைப்புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் விடுதலைப் புலிகளின் தலைமையினால் உருவாக்கபட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு செயற்படப் போகிறது என தமிழ் மக்கள் ஆவலாய் இருந்தனர். தவிர, ஒட்டுமொத்த தமிழினத்தின் ஏக பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை தமிழ் மக்கள் ஏற்றிருந்தனர்.

அதன்பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் பல புதுவரவுகள் வந்ததும் சென்றதுமாக அமைந்திருந்தாலும் அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீழ்ச்சிக்கான பாதையாகவே பார்க்கப்பட்டது. ஒற்றுமை என்ற மிகப் பெரும் நம்பிக்கையில் இயங்கிய கூட்டமைப்பிற்குள் உள்ளக முரண்பாடுகள் உச்சம் பெறத் தொடங்கின. முரண்பாடுகள் உச்சம் பெற்றதைத் தொடர்ந்து தமிழர் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனும் கூட்டிலிருந்து இலங்கை தமிழரசுக் கட்சி பிரிந்து செல்வதாகவும் தமிழரின் உரிமை சார்ந்து, தனித்து, தனிவழியில் செல்வதாகவும் கூறிக்கொண்டது.

இங்குதான் தமிழினத்தின் ஒட்டுமொத்த பலமும் பலவீனமாகிப் போனது என்பதை எவரும் சிந்திக்கவில்லை. தமிழினத்தின் இருப்புக்காய், அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காய், அவர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கு நீதியான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்காவேனும் ஒன்றிணைந்திருப்போம் என்று சிந்திக்காத தமிழ்த்தரப்பு பிரிந்து சென்றதன் விளைவை கடந்த பாராளுமன்றத் தேர்தலில் புரிந்துகொண்டது. நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழர் பூமியில் என்றுமில்லாத ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தது.

ஆம், தெற்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி கடந்த பாராளுமன்றத் தேர்தலில் மூன்று ஆசனங்களை பெற்றுக் கொண்டது. தமிழரசுக் கட்சியின் வீழ்ச்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து தனிவழியில் சென்றது மிகப்பெரிய காரணம் என அரசியல் ஆய்வாளர்கள் கூறிக்கொண்டாலும் தமிழரசுக் கட்சிக்குள் இருந்த உள்ளக முரண்பாடும் தோல்விக்கு மிகப் பெரும் பங்காற்றியிருந்ததை எவரும் மறந்துவிட முடியாது. பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக்கட்சிகளைத் தமிழ் மக்கள் நிராகரித்துள்ளனர் என்பதற்குள்: சுயநல அரசியலை மக்கள் விரும்பவில்லை என்ற மகா உண்மை பொதிந்துள்ளமையினை வென்றவர்களும் தோற்றவர்களும் நன்குணர்ந்திருப்பர்.

**“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற சொல் தமிழ் மக்களின் நாடி, நரம்புகளை புடைத்தெழச் செய்யும் சொல். ஆயுதப் போரில் உச்சத்தில் இருந்த விடுதலைப் புலிகளால் அரசியல் தளத்தில் தமிழ் மக்களின் குரலாக, ஒட்டுமொத்த தமிழினத்தின் ஏக பிரதிநிதிகளாக தமிழர் அரசியல் தளம் இருக்க வேண்டும் என்ற சிந்தனையால் உருவாக்கப்பட்டதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.**



நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் உயிர்பெற்றுள்ளமையை உணரக்கூடியதாக இருக்கிறது. பாராளுமன்றத் தேர்தலில் தெற்கு அரசியல் கட்சிக்கு அமோக ஆதரவை வழங்கிய தமிழ் மக்கள் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஆதரித்திருந்தனர்.

பாராளுமன்ற வெற்றியை சாதமாக்கி உள்ளூராட்சித் தேர்தலில் வென்று விடலாம் என நம்பிய தேசிய மக்கள் சக்திக்கு தோல்வி எனக்கூறிக் கொண்டாலும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இணையான வாக்குகளை தேசிய மக்கள் சக்தி பெற்றிருக்கின்றது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்விடத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரு உண்மையை புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்கள் ஒற்றுமையை விரும்புகின்றனர். அந்த ஒற்றுமை 2009 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெரு விருட்சம் போன்ற ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்பதில் நூறு விகிதம் உறுதியாக இருக்கின்றனர்.

உள்ளூராட்சி சபைத்தேர்தலில் பெற்றுக்கொண்ட வெற்றியைக் கருத்தில் கொண்டு; அல்ல, நாம் தனிவழியிலேயே செல்வோம். எமக்கான மக்கள் ஆதரவு என்றும் மங்காது என தமிழ்த் தேசியக் கட்சிகள் தப்புக் கணக்குப் போடுமாக இருந்தால் அது தெற்கு அரசியல் கட்சிகளை மீண்டும் தமிழ் மக்கள் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பமாக அமைந்துவிடும்.

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பிணர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** விதானையார் நீங்கள் தானே அரசியல் விமர்சகர். நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் பற்றி என்ன சொல்லுறியள்.

**விதானையார்:-** தேர்தலில எங்கட மக்கள் ஆர்வம் இல்லாமல் இருந்ததைக் காண முடிந்தது. அதோட, தேசிய மக்கள் சக்திக்கும் சில இடங்களில சந்தர்ப்பம் கிடைத்திருக்குது.

எனினும் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது கட்சிக்கு வாக்களிக்கிற தென்பதை விட முகத்திற்கு வாக்களிக்கிறது. ஆகையால தேசிய மக்கள் சக்தி(NPP) வென்ற ஆசனங்கள் என்பது ஜனாதிபதி அநுர குமாரதிசாநாயக்காவுக்காகவோ அன்றி அந்தக் கட்சிக்காகவோ விழுந்ததல்ல மாறாக, எங்கெங்கெல்லாம் என்.பி.பி வெற்றி பெற்றதோ அதற்குக் காரணம் அந்த வேட்பாளர்கள் என்பது தான் உண்மை.

மற்றும்படி உள்ளூராட்சி சபைகளில கிடைத்த வெற்றியை தங்கட கட்சிக்காகக் கிடைத்த வெற்றி எண்டு தமிழரசுக் கட்சியோ அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ அல்லது வேறு எந்தக் கட்சியோ நினைத்தாலும் அது மிகத் தவறு என்பது தான் என்ர கருத்து.

**மூப்பர்:-** விதானையார் அதை எப்படி நீங்கள் சொல்லுவியள்.

**விதானையார்:-** மூப்பர், அண்மையில நடந்த பொதுத் தேர்தல் இதற்கு நல்ல உதாரணம். ஏன்? பொதுத் தேர்தலில நிண்டு தோற்ற தமிழ் வேட்பாளர்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில நிண்டிருந்தால் கூட அவர்கள் தோற்றுத்தான் இருப்பினம்.

ஆக, எங்கெல்லாம் பொருத்தமான வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டிருக்கினமோ அங்கெல்லாம் அந்த வேட்பாளர்கள் கட்சி என்ற எல்லை கடந்து தங்கட தனிப்பட்ட செல்வாக்கால வெற்றி பெற்றிருக்கினம்.

**சிறாப்பர்:-** ஜே.வி.பியை நம்புவதற்கு மக்கள் தயாராக இல்லை என்பதைத் தான் இந்தத் தேர்தல் முடிவுகள் தெரிவிப்பதாக சிவாஜிலிங்கம் அவர்கள் கூறியிருக்கிறார் அல்லோ.

**விதானையார்:-** சிவாஜிலிங்கம் அவர்கள் தமிழ்ப் பற்றுள்ள ஓர் அரசியல்வாதி என்பதில எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

ஆனால் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளை வைத்துக் கொண்டு ஜே.வி.பியை நம்புவதற்கு தமிழ் மக்கள் தயாரில்லை என்ற அவரின் கருத்து முற்றிலும் தவறானது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் ஜே.வி.பியை நம்ப வில்லை. மாறாக ஜனாதிபதி அநுரவை நம்புகினம்.

இப்போது அதிரடியாக ஜனாதிபதித் தேர்தல் நடக்குமாக இருந்தால் அநுரகுமார திசாநாயக்கவுக்குத் தான் தமிழ் மக்கள் வாக்களிப்பினம். ஏனெண்டால் ஒப்பீட்டு ரீதியால அநுர பரவாயில்லை என்பது தான் தமிழ் மக்களின் நிலைப்பாடு, இதை இன்னும் சுருக்கிக் கூறுவதாயின் ஜனாதிபதி அநுரவை விட, தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய இன்னொரு சிங்களத் தலைவர் நாட்டில இருப்பதாகத் தெரியவில்லை.

ஆகையால ஜனாதிபதி அநுரவை நம்புவதற்குத் தமிழ் மக்கள் தயாரில்லை என்பது ஏற்புடைய கருத்தல்ல.

அப்படியான கருத்துக்கள் தமிழ் மக்களுக்குப் பாதகமாக அமையுமே யன்றி, அதனால் எமக்கு எந்தச் சாதகத் தன்மையும் கிடையாது, ஆகையால இவ்வாறான கருத்துக்களைத் தவிர்ப்பது தான் நல்லது.

**பண்டிதர்:-** வெற்றி பெற்ற தமிழரசுக் கட்சியோ அல்லது தமிழ்த் தேசிய முன்னணியோ இந்த வெற்றியை தங்களின் கட்சி வெற்றியாக அல்லது தங்களின் அரசியல் நகர்வுகளை தமிழ் மக்கள் அங்கீகரித்துள்ளதாகக் கருதலாமோ.

**விதானையார்:-** ஒரு போதும் இல்லை, அவ்வாறு கருதினால் அந்தக் கட்சிகளின் அரசியல் ஞானம் பூச்சியம் என்று தான் சொல்ல வேணும்.

அதேநேரம் தமிழர் தாயகத்தில் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தாங்கள் அமோக வெற்றி பெறுவோம் என ஜனாதிபதி அநுர தலைமையிலான என்.பி.பி நினைத்திருந்தாலோ அல்லது தங்களுக்குத் தோல்வி என்பதால தமிழர் பிரதேசத்து உள்ளூராட்சி சபைகளை ஓரங்கட்ட நினைத்தாலோ அது மிகப் பெரும் பாதிப்பாக அமையும் என்பதையும் என்.பி.பி உணர்ந்து கொள்ள வேணும்.

இந்த நேரத்தில ஓர் உண்மையைக் கூறித்தானாக வேண்டும். அதாவது யாழ். மாவட்டத்தில என்.பி.பி சார்பில தெரிவாகிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களின் தேவைகள் மற்றும் உரிமைகள் தொடர்பில உரக்கக் கதைக்க வேணும்.

அதேநேரம் அவர்கள் கதைப்பதற்கு என்.பி.பி தடை விதிக்கக் கூடாது.

தொடந்து என்.பி.பி தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மௌனமாக இருப்பார்களாயின் அது தமிழ் மக்களிடம் எதிர்மறையான மனப் பதிவுகளையே ஏற்படுத்தும்.

உண்மையில நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில என்.பி.பியின்ர தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் அமைதியான போக்கு அந்தக் கட்சிக்கு சாதகமாக இருக்கவில்லை என்பதும் இங்கு உணரப்பட வேணும்.

**வாத்தியார்:-** அதுசரி விதானையார், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் தனது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு யாழ். மாநகர சபைத் தேர்தலில போட்டியிட்டது தொடர்பில என்ன நினைக்கிறியள்.

**விதானையார்:-** குறித்த விரிவுரையாளருக்கு யாழ்.பல்கலைக் கழகத்தில நல்ல நண்பர்கள், நல்ல ஆலோசகர்கள் இல்லை என்பது தான் என்ர கருத்து. எதுவாக இருந்தாலும் சம்பந்தப்பட்ட விரிவுரையாளர் ஓர் ஆளுமை மிக்க கல்வியியலாளர், எனவே நடந்தது நடந்ததாக இருக்க அவரை மீளவும் விரிவுரையாளராக யாழ்.பல்கலைக் கழகம் எடுத்துக் கொள்ள வேணும்.

ஏனென்றால் அவரின்ற அறிவாற்றல் எங்கட் பிள்ளைகளுக்குக் கிடைக்க வேணும்.

இவ்வாறு விதானையார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## நம் தமிழ் மக்கள் நிறைந்த அரசியல் ஞானம் உடையவர்கள்

ஆதித்தன்



இந்தியா-பாகிஸ்தான் போர் நடைபெற்றால் நிலை எவ்வாறிருக்கும் வியாசரே?







உள்ளூராட்சித் தேர்தல் அரசிற்கு உணர்த்திய பாடம் என்ன வியாசரே?

**எதற்கெடுத்தாலும் மனைவி அகப்பைக் காம்பைக் காட்டுகிறாளே வியாசரே?**

*தவராஜன்-கொற்றாவத்தை*

அநேக ஆண்களுக்கு தி.மு, தி.பி என்று இரு வேறு காலங்கள் இருக்கவே செய்யும்.

அதாவது திருமணத்திற்கு முன்னர், திருமணத்திற்கு பின்னர் என்ற நிலை.

தாய்க்கு சுடுநீர் வைப்பதற்கு ஒரு சுள்ளி விறகு எடுத்துக் கொடுக்காமல் ஊதாரியாக ஊர் சுற்றுபவன் திருமணம் முடிந்ததும் பெட்டிப் பாம்பு மகுடிக்கு ஆடுவது போல மனைவியின் பேச்சுக்கு தலையாட்டும் பொம்மை ஆகி விடுவான்.

ஆசிரியர் அடிப்பதற்கு தடியை எடுக்கும் போது கையை நீட்டியபடி விறைப்பாய் நின்றவனுக்கு, அகப்பைக் காம்பு எம்மாத்திரம்.

**சிவனை அனைவரும் வழிபடலாமா வியாசரே?**

*தர்மபாலன்-மீசாலை*

வேதங்களின் மூத்தவன். விக்கினங்கள் போக்கிடும் காவலன். மிடரினில் நஞ்சை அடக்கி உலகைக் காத்து நின்ற காவலன். சுடலைச் சாம்பல் பூசி அனைவரும் சரி நிகர் என்று சமத்துவம் கூறிய சாமானியன்.

பிட்டிற்கு மண் சுமந்து பிரம்படிபட்டவன். தன்வலியை உலகின் அத்தனை உயிர்களுக்கும் உறைக்கச் செய்த உத்தமன். கழுத்தினில் நஞ்சுமாலை அணிந்து காவல் நின்ற ஒப்பற்ற தலைவன். அவனே முழுமுதற் கடவுளாம். மூலப்பொருளாம். மும்மலங்களையும் அடக்கும் முழுமுதற் கடவுளாம் சிவன். அவன் இல்லையேல் எதற்கு இந்த சீவன்?

**உள்ளூராட்சித் தேர்தல் அரசிற்கு உணர்த்திய பாடம் என்ன வியாசரே?**

*மரீசன்-இணுவில்*

அரசிற்கு உணர்த்திய பாடம் என்பது அடுத்த கட்டம். எம் தமிழ் அரசியல்வாதிகளுக்கு தமிழ் மக்கள் மிகச் சிறப்பான பாடம் எடுத்திருக்கிறார்கள்.

அதாவது, நீங்கள் பதவி மோகம் கொண்டு உங்களுக்குள்ளேயே ஆள்சேர்த்து அடிபடுவது, வெற்றிக்காய் கன்னை சேர்வது, எங்களிடம் ஒரு கதை கதைத்துவிட்டு தெற்கு அரசியல் தலைவர்களுடன் கள்ள டீல் போடுவது இப்படி செய்ததால் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் உங்களுக்கு எது நடந்ததோ அதுவே எதிர்காலத்தில் நடக்கும் என்று கூறாமல் கூறியிருக்கிறார்கள்.

இதைப் புரிந்து கொள்ளாமல் மீண்டும் தலையால் நடப்பேன் என முதலாளிமார் முந்தினால், தெற்கு அரசியல் கட்சிகளை ஆதரிப்பதை விட தமிழ் மக்களுக்கு வேறு வழியில்லை. அவ்வளவு தான்.

**அரசியல் பற்றி உங்களின் கருத்து என்ன வியாசரே?**

*விஜய்-முகமாலை*

பொய் சொல்லும். புரளிகள் பல விடும். எட்டப்பன் வேலைகளை எட்டி நின்று பார்த்துவிட்டு கட்டப் பொம்மன் வசனத்தை கட்டடத்தில் நின்று கத்தும்.

தன் கண்ணைத் தானே குத்திவிட்டு நீதி கேட்டு நடை பயணம் செய்யும். அதில் நாலு பேரைச் சேர்க்கும். நரி வேலை பல பார்க்கும்.

தன் வங்கிக் கணக்கில் வாரி வாரிக் குவிக்கும்.

நல்லவன் நான் என்று நாகூட கூசாமல் கூறும். நாலு சுவருக்குள் நடக்கிறது என்ற நினைப்பில் பூனையாய் கண்ணை மூடிப் பால் குடிக்கும்.

கன்னை பிரிந்து நின்று கடுகதி ரயில் விடும். கருணை மனுக்கேட்டு வீடு விடாய் பிச்சைப் பாத்திரமேந்தித் திரியும்...

அன்பு
வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
0076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS, Whats App செய்யுங்கள்

**மீண்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக இணைய அழைப்பு விட்டிருக்கிறதே தமிழரசுக் கட்சி?**

*சிவம்-வதிரி*

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தனி வழி என்று வெளியேறியது தமிழரசுக் கட்சி. முறையின்படி தமிழரசுக் கட்சி தானே தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைய வேண்டும்.

**இந்தியா-பாகிஸ்தான் போர் நடைபெற்றால் நிலை எவ்வாறிருக்கும் வியாசரே?**

*ரிதுஷ்-வதிரி*

இந்தியாவுடன் ஒப்பிடும் போது பாகிஸ்தானின் பலம் மிகமிகக் குறைவு என்பதே மெய்.

இந்தியாவிடம் இருக்கும் ஆயுத பலத்தில் 3/1 கூட பாகிஸ்தானிடம் இல்லை.

ஆனால் பாரிய அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய அணுகுண்டு பாகிஸ்தானிடம் இருக்கிறது.

இருவர் அடிபடும் போது பலவீனமானவன் திடீரென கல்லைக் கையில் எடுப்பான். அது பலமானவனுக்கு மனரீதியான பலவீனத்தைக் கொடுத்து விடும்.

இதேபோல பாகிஸ்தான் அணுகுண்டில் கைவைத்தால் அழிவு நிச்சயம்.

அந்த அழிவு மிக மோசமான அழிவாகவே இருக்கும். அதன்பின் பாகிஸ்தானை உலக வரைபடத்தில் இருந்து அழித்து பயன்ஏதும் ஆகிவிடாது. போர் எதற்கும் நல்ல தீர்வல்ல. இதுவே முடிவு.

**தன்னம்பிக்கை இல்லாதவர்கள் எவ்வாறு இருப்பார்கள் வியாசரே. விளக்குக?**

*இந்து-மந்துவில்*

எனக்குத் தெரிந்த ஒருத்தர் மிகச் சிறந்த மனிதன். நன்றாகப் படித்தவர். ஒரு பெரிய நிறுவனத்தில் கணக்காளராக பணியாற்றுகிறார்.

அவர் ஐயாயிரத்தை ஐந்து முறை எண்ணுவார். அப்படி எண்ணி சம்பந்தப்பட்டவரிடம் கொடுத்து விட்டு அவர்கள் எண்ணும் போது, தான் கொடுத்தது சரியா என தானும் எண்ணுவார்.

இது அவரின் தன்னம்பிக்கையில் உள்ள பிரச்சினை. தன் எண்ணிக்கையில் பிழை இருந்து விடும் என்ற பயம். அவர் எவ்வளவு தான் படித்திருந்தாலும் தன்னம்பிக்கை இல்லையெனில் அவரின் படிப்புக்கு எந்த உயர்வும் இருக்காது.

**உப்பு, புளி, தேங்காய் என்பவற்றுக்கு இப்படித் தட்டுப்பாடு வந்து விட்டதே வியாசரே?**

*மகாலட்சுமி-கோண்டாவில்*

உருப்படாதவனின் பொண்டாட்டியாக இருந்தால் உப்பென்ன, புளியென்ன... என்றொரு சொல்லாடல் உண்டு.

இன்றைய நாட்டு நிலையை நினைக்கும் போது இதுவே நினைவுக்கு வந்தது.

ஆனையிறவு உப்பு ரஜலுனு ஆகி விட உப்பு தப்பாகி விட்டது. புலிப்பீதி போக புளிப்பீதி வந்து விட்டது. வெள்ளை ஈக்கள் தேங்காய்களை தூரமாக்கி விட்டது. இன்னும் என்னென்ன நடைபெறப் போகிறது என்று நினைக்கும் போது பீதியே ஏற்படுகிறது.

# கவிதைக் கலசம்

## உயிரில் உறைந்த அன்னையே!




பத்துத் திங்கள் தவமிருந்து
பத்தியம் பல காத்து
உதிரத்தை பாலாக்கி
ஊட்டிய அன்னையே - நாம்
தரணியில் தலை நிமிர்ந்து
தடம் பதித்திட
ஊன், உறக்கம் இன்றி
உயிர் தந்த அன்னையே

பாதம் வலிக்க பாதை யோரம்
பொடி நடையாய் நீ நடந்து - வந்து
அன்னம் அழித்த அன்னையே
துயரங்கள் உனை சூழ்ந்த போதும்
நிலையாகக் கல்வி கற்க வைத்த
அன்னையே!

திருமதி. ம. வளர்மதி,
3ம் வட்டாரம், முள்ளியவளை.

## பொக்கிஷக் கவிதை

1956ஆம் ஆண்டு
கவிஞர் முருகையன் அவர்களால்
எழுதப்பட்ட கவிதை

### பகை வேர் அற ஒரு போர்



அமுதொன்றிய தமிழ் என்பதை
அவர் கொன்றிட முனைவார்
அது கண்டு உயிர் சுமை கொண்டு
இனி அழியார்
தமிழ் மைந்தர்
குமுறும் கடல் தனை வென்றதோர்
குரலில் ஒரு குரலில்
"கொடும் எங்களின் உரிமை!"
எனக்
கொள்வோம்
ஒரு போரில்

மொழியே உயிர்: முதலாவது.
முடிவாவதும் அதுவே.
முடியாது
அதை விடவா?
சமர் முரசே அறை தமிழா!
விழியே மொழி
ஒரு போதிலும்
மிதிகாலிடல் சகியோம்.
மிக வேதனை அடைவார் -
மொழி
விலை பேசிட முனைவார்.

சிறுபாலவர்
திகழ் தீயினை நிகர் சிந்தைகள்
புகையின்,
சிறு தீவிதன் கதி யாவது?
சிதறா, உயிர் குமுறும்
நிறுதாளிகள் படும் ஈழமும்
நெரியா உயிர் கருகும்
நினையார் - குறுகிய பார்வையர்
நிறை தீமைகள் புரிவார்.

தலை கால் திசை புரியாதவர்
தமிழ் மீது சருவுவார்
சனநாயக நெறி நேர்மைகள்
தமை மீறுதல் புரிவார்
அலைபோல் எழு, தமிழா!
கொடும்
அநியாயம் இது அடுவாய்
அற நேர்வழி தனில் ஓர் சமர் -
அது நீதியை உதவும்.

சகியார், தமிழ் மொழியோர் இவை
சரி நீதிகள் விழைவார்
சதிகாரரின் வலை சாடுவார்
தணியார் அது வரையும்
பகை வேரற ஒரு போர் -
படை.

பல ஆயுதம் இலவாய்,
பசிதாகிய அறநேர்மையின்
பலமே கொடு புரிவாய்.

முருகையன்

## தன்னம்பிக்கை



பள்ளத்தில் விழுந்து கிடப்பவன்
பனிமலைச் சிகரத்தில்
பாதம் பதிக்க மாட்டானா?

கடைசிவரை நம்பிக்கை இழக்காதே
ஏனெனில் கடைசி வரியில் கூட
உனக்கான வெற்றி எழுதப்பட்டிருக்கலாம்.

நீ தொட்டது எல்லாம் தோல்வி என்று
துவண்டு விடாதே!
நீ தன்னம்பிக்கையுடன்
கால் எடுத்து வைத்தால்
வெற்றி உன் காலடியில்...

ப.சானுகா,
யாழ்ப்பாணம்.

## முடிய முதல் முந்துவீர்...!



பப்பாசிப் பழங்களுடன்
சந்தை வந்தாள் பேதை..!
ஊர்ப் பழங்கள்
ஆர் பெறுவார்...?
அலுத்துக் கொள்கிறான்..
தந்திர வியாபார மேதை!
அவனது ஆட்களே
அக்கம் பக்கத்திலும்..!
பன்னிரு கிலோ பழத்தில்
இரு கிலோ கழிவு தான்!
முப்பது ரூபா வீதம்
முந்நூறு அளந்து வைக்க,
வறுமைக் கோலத்தில்
இடுப்பொடிய சுமந்து வந்து
கடுப்போடு அவள் போக,
கூவுகிறான் அம் மேதை..
ஊர்ப் பப்பா! ஓடி வாரீர்!
முந்நூறு ரூபா கிலோ!
முடிய முதல் முந்துவீர்..!

இரா.ஜெயக்குமார்

## அவள்



ஏதோ ஒரு தேடல்
தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது
அவள் வாழ்வில்,
எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் அந்த
சிரித்த முகம் அவளுக்குச் சொந்தமானது அல்ல!
சூழ்நிலைகளுக்கு ஏற்ப
அவள் போட்டுக் கொள்ளும் முகமூடி அது

யாரும் இல்லாதது போல்
ஒரு வெறுமை,
நெஞ்சில் அடக்கி வைத்த அழுகை என,
முடிவில்லா கனவுகளுடன்
வாழ்வில் சாதிக்கத் துடிக்கும்
அவள் மனதில்
ஒரு பாதி கனவு, மறு பாதி துன்பம்

அவளைத் தேற்றும் சொற்கள்
யாரிடமும் இல்லை,
இருந்தும் தேடுகிறாள்
கிடைக்காதா என,
தேடும் போதெல்லாம்
அது அவளுக்கு கிடைப்பதில்லை
அதை நிகழ்த்த அவள் தேடுவது என்னமோ
தந்தையின் மடியை
அது இனி கிடைக்காது என,
தெரிந்தும் அவள் பேராசை ஓயவில்லை

உடைந்த சிறகுகள் வைத்து
உயரப் பறக்க ஆசை தான் அவளுக்கு
ஆனால்,
அது இன்னும் அவளைக் காயப்படுத்திக்
கொண்டே தான் இருக்கிறது
இருந்தும்
எதிர்காலம் குறித்த கேள்விகளுடனும்
கனாக்களுடனும் பயணித்துக் கொண்டே தான்
இருக்கிறாள் அவள்...

செ.திலக்சி,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

மனமுடைந்த சிறுமியின் கண்ணீரில்
இனம்புரியாத மலர்ச்சி...
வலம் வந்தது - அவளின்
நாய்க்குட்டி!

யோ.யொனிஷா - புலோலி

## அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமான
சங்குநாதத்தில் நீங்களும்
எழுதலாம்...

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126

● ஜூனியர் விகடன்

# அதிரடி இந்தியா "ஆப்ரேஷன் சிந்தூர்" அடுத்து என்ன?

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் பதற்றம் அதிகரித்திருந்த சூழலில், பாகிஸ்தான் பயங்கரவாத முகாம்கள் மீது இந்திய இராணுவம் தாக்குதல் நடத்தியிருக்கிறது. இதில், பயங்கரவாத அமைப்புகளின் முகாம்கள் அழிக்கப்பட்டிருப்பதாகவும், பயங்கரவாதிகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் இந்திய இராணுவம் தெரிவித்திருக்கிறது. இந்த நிலையில், இரு நாடுகளும் போரை நோக்கிச் செல்லும் போக்கை, அமெரிக்கா, சீனா உள்ளிட்ட உலக நாடுகள் கவலையுடன் பார்க்கின்றன!

### பஹல்காம் தாக்குதலும்... இந்தியாவின் பதிலடியும்!

ஜம்மு காஷ்மீரிலுள்ள பஹல்காமில் 26 அப்பாவிச் சுற்றுலாப்பயணிகளை, கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி பய்ங்கரவாதிகள் கொடூரமாகச் சுட்டுக் கொன்றனர். அதற்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு பகுதிகளிலுள்ள பயங்கரவாத முகாம்கள் மீது மே 6 ஆம் திகதி நள்ளிரவு, இந்திய இராணுவம் துல்லியத் தாக்குதலை நடத்தியிருக்கிறது. 'ஆப்ரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் ஒன்பது இடங்களைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப் பட்டிருக்கிறது.

### 'ஆபரேஷன் சிந்தூர்!'

பாகிஸ்தான் மீது இந்திய இராணுவம் நடத்திய தாக் குதல் குறித்த விவரங்களை நம்மிடம் விளக்கினார் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான கர்னல் என்.தியாகராஜன். "பாகிஸ்தானில் செயற்படும் பயங்கரவாத அமைப்புகளின் முகாம்கள் பற்றிய துல்லியமான தரவுகளின் அடிப்படையில் இந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டது. நள்ளிரவு 1:05 மணி முதல் 1:30 மணி வரை 25 நிமிடங்களுக்குத் தாக்குதல் நீடித்திருக்கிறது. தாக்குதலுக்கு உள்ளான சவாய் நளா முகாம், கோல் பூர் முகாம் ஆகியவை எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டிலிருந்து 30 கி.மீ தொலைவில் அமைந்திருக்கின்றன. கோல்பூர் முகாம் லஷ்கர் இ தொய்பாவின் தளம். எல்.ஓ.சி-யிலிருந்து 100 கி.மீ இற்கு அப்பால் அமைந்திருக்கும் பாகல்பூர் தளம், ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாத அமைப்பின் தலைமையகமாகச் செயற்பட்டது. அது, பாகிஸ்தான் இராணுவத் தளத்துக்கு மிக அருகில் இருக்கிறது. என்கிறார் கர்னல் என்.தியாகராஜன்.

### காஷ்மீர் சிக்கல்... தீராத துயரம்!

1947 இல் இந்தியா - பாகிஸ்தான் என இரு நாடுகளாகப் பிரிந்ததிலிருந்தே, அவை பகை நாடுகளாக மாறிவிட்டன. இரு நாடுகளுக்கு இடையிலான பகைக்கு ஜம்மு காஷ்மீர் முக்கியக் காரணமாக இருந்துவருகி றது. ஜம்மு காஷ்மீர் வழியாகத்தான் பாகிஸ்தான் தனது எல்லை தாண்டிய பயங்கரவாத நடவடிக்கைகளைத் தொடர்ந்துவருகிறது. இந்தியா - பாகிஸ்தான் இடையே இதுவரை நான்கு போர்கள் நடைபெற்றிருக்கின்றன.

### நாடு முழுவதும் பாதுகாப்பு ஒத்திகை!

புல்வாமா தாக்குதலுக்குப் பிறகு சமீபத்தில் பஹல்கா மில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதல், இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப்பதற்றச் சூழலை உருவாக்கியிருக்கிறது. இந்தச் சூழலில் தான், மத்திய உள்துறை அமைச்சகத்தின் உத்தரவின் பேரில், நாடு முழுவதும் 244 இடங்களில் மே 7 ஆம் திகதி 'பாதுகாப்பு ஒத்திகை' நடைபெற்றது. வான்வழித் தாக்குதல் நடைபெற்றால் முன்கூட்டியே பொதுமக்களை எச்சரிக்கையும் செய்யும் விதமாக பொது இடங்களில் அபாய சைரனை ஒலிக்கச் செய்வது போன்ற ஒத்திகைகள் நடைபெற்றன. 'இந்தியா போருக்குத் தயாராகிறதோ...' என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் இந்தப் பாதுகாப்பு ஒத்திகை ஏற்படுத்தியிருந்த நேரத்தில், பாதுகாப்பு ஒத்திகை நடைபெறுவதற்கு முந்தைய இரவிலேயே பாகிஸ்தானிலுள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்திய இராணுவம் தாக்குதல் நடத்தி விட்டது.

### இந்தியா அதிரடி- பாகிஸ்தான் மிரட்டல்!

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளுக்குத் தேவையான உதவிகளை பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ செய்து கொடு த்திருக்கிறது என்ற தகவல் என்.ஐ.ஏ-வின் முதற் கட்ட விசாரணையில் தெரியவந்திருக்கிறது. அதைத் தொடர்ந்துதான், பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுக்க இந்தியா களமிறங்கியது. முதற்கட்டமாக, சிந்து நதி நீர் ஒப்பந்தம் நிறுத்திவைப்பு, பாகிஸ்தானியர்களுக்கு இந்திய விசாரத்து, பாகிஸ்தான் தூதர்கள் வெளியேற்றம், அட்டாரி - வாகா எல்லை மூடல் என அதிரடி முடிவுகளை எடுத்த இந்தியா, தனது வான்வெளியில் பாகிஸ்தான் விமானங்கள் பறக்கத் தடைவிதித்தது.

இந்தியாவின் நடவடிக்கைகளைக் கண்டு அலறிய பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், 'இந்தியாவின் நடவடிக்கைகள் ஒருதலைப் பட்சமானவை, நியாயமற்றவை, அரசியல் நோக்கம் கொண்டவை' என்று குற்றம்சாட்டினார். மேலும், பாகிஸ்தானைச் சேர்ந்த அமைச்சர்களும், முன்னாள் ஆட்சியாளர்களும் இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்தனர். பாகிஸ்தான் ரயி ல்வே அமைச்சர் ஹனிஃப் அப்பாஸி, 'ஷாஹீன், கஸ்னவி போன்ற ஏவுகணைகளையும், 130 அணு ஆயுதங்களையும் நாங்கள் காட்சிக்கு வைத்திருக்கவில்லை. இந்தியாவுக்காகத்தான் அவற்றை வைத்திருக்கிறோம்' என்று மிரட்டல் விடுத்தார்.

### போரை விரும்பாத சீனா!

"பாகிஸ்தானைப் பொறு த்த அளவில், அது ஒரு திவாலான நாடு. போரில் இறங்கி னால் அந்த நாடு மேலும் கடு மையான பாதிப்புகளைச் சந்திக்கும். பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் ஆதரவு கொடு க்கிறது என்பதால், சர்வதேச அளவில் பாகிஸ்தான் கடும் அதிருப்தியைச் சம்பாதித்துவைத்திருக்கிறது. அத்த கைய சூழலில், பாகிஸ்தான் அடக்கியே வாசிக்கும்.

இரு நாடுகளுக்கு இடையிலும் போர் மூள்வதை சீனா விரும்பாது. சீனா பெருமளவில் பாகிஸ்தானில் மூலதனம் போட்டிருக்கிறது. பாகிஸ்தான் இராணுவத்துக்கும், கடற்படைக்கும், விமானப் படைக்கும் பெருமளவில் சீனா உதவியிருக்கிறது. இப்படியான சூழலில், போர் வந்தால் சீனா பாதிக்கப்படும். சீனாவுக்கு இந்தியாவின் சந்தையும் முக்கியம். 8,000 கோடி ரூபாய் அளவுக்கு சீனாவிலிருந்து இந் தியா இறக் குமதி செய் கிறது. போர் வந்தால் அதன் வர்த்தகம் பாதிக்கப்படும். எனவே, 'போருக்குப் போக வேண்டாம்' என்று பாகிஸ்தானுக்கு சீனா அறிவுறுத்தும்"



### இந்தத் தாக்குதல்களே போர்தான்!

"பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு, இரு தரப்பிலும் எல்லையில் தாக்குதல்கள் நடந்தன. தற்போது, பாகிஸ்தான் மீது இந்திய ராணுவம் மிகப்பெரிய தாக்குதலை நடத்தியிருக்கிறது. பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புகளின் தளங்களில் இந்திய இராணுவம் நடத்திய தாக்குதலில் பத்துப் பேர் உயிரிழந்திருப்பதாக இந்தியத் தரப்பு தெரிவிக்கிறது. ஆனால், 26 பேர் உயிரிழந்ததாகவும், அவர்கள் அனைவரும் பொதுமக்கள் என்றும் பாகிஸ்தான் தரப்பு கூறுகிறது. மேலும், ஐந்து இந்திய விமானங்களை அழித்திருப்பதாகவும் பாகிஸ்தான் கூறுகிறது. ஒவ்வொரு விமானத்தின் விவரங்களையும் பாகிஸ்தான் தெரிவித்திருக்கிறது.

ஆனால், அது குறித்து இந்தியத் தரப்பு எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. போர் நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன. இதைப் போர் இல்லை என்று சொல்ல முடியாது. அதேநேரம், இந்த நிலைமை எந்த அளவுக்கு முற்றும் என்று இப்போதைக்கு சொல்ல முடியாது"

தீவிரமான போர் இன்னும் ஆரம்பிக்கவில்லை, அதற்குள்ளாகவே நாட்டில் பெரும் பதற்றம் உருவாகியிருக்கிறது. இந்தியாவின் மீதான பயங்கரவாதத் தாக்குதலுக்கு, நிச்சயம் தீர்வு கண்டாக வேண்டும். கொல்லப்பட்ட அப்பாவிகளின் பொருட்டு நிச்சயம் பதிலடி கொடுக்க வேண்டும். ஆனால், போர் எப்போதுமே போர்தான். அதன் விளைவு அழிவுதான். இரு தரப்பிலும் அப்பாவிகள் பலியாகும் பெரும் போராக மாறிவிடாமல், சிந்தூர் போன்ற துல்லியமான தாக்குதல் மூலம் தீவிரவாதம் அழிக்கப்பட்டு, பேச்சுவார்த்தைகள் மூலம் அமைதியான தீர்வுகளை ஏற்படுத்தினால், அதுவே 'இந்தியா' எனும் அகிம்சை தேசம், இந்த உலகத்துக்குச் சொல்லும் பெரும் செய்தியாக இருக்கும்!

# காலத்தால் அழியாத கானங்கள்

படம்: தர்மதுரை
பாடகர் : கே. ஜே. யேசுதாஸ்
இசையமைப்பாளர் : இளையராஜா
இயற்றியவர்: பஞ்சு அருணாச்சலம்



அண்ணன் என்ன தம்பி என்ன சொந்தம் என்ன பந்தம் என்ன
சொல்லடி எனக்கு பதிலை நன்றி கொன்ற உள்ளங்களை
கண்டு கண்டு வெந்த பின்பு என்னடி எனக்கு வேலை

நம்பி நம்பி வெம்பி வெம்பி ஒன்றும் இல்லை என்ற பின்பு
உறவு கிடக்கு போடி.
இந்த உண்மையை கண்டவன் ஞானி (2)

அண்ணன் என்ன தம்பி என்ன.....

ஆசையில் நான் வைத்த
பாசத்தில் நேசத்தில் வந்ததிங்கு
வேதனையும் சோதனையும்தான்
நெஞ்சம் வெந்ததடி சோகத்தினில்தான்
பாம்புக்கு பால் வைத்து நான் செய்த பாவத்தில்
வந்ததிங்கு கொஞ்சமல்ல நஞ்சமல்லடி
எந்தன் நெஞ்சம் இங்கு நெஞ்சமல்லடி

காருக்கும் பேருக்கும் தேருக்கும் ஆசை என்ன
நெருக்கு நேர் இன்று ஏய்த்திடும் மோசம் என்ன
ஊருக்கு ஞாயங்கள் சொல்லிடும் வேஷம் என்ன
உண்மையை கொன்றப் பின் நெஞ்சுக்கு நீதி என்ன
போகும் பாதை தவறானால் போடும் கணக்கும் தவறாகும் ஓ ஓ

அண்ணன் என்ன தம்பி என்ன சொந்தம் ....

நம்பி நம்பி வெம்பி வெம்பிஒன்றும் இல்லை என்ற பின்பு...

அண்ணன் என்ன தம்பி என்ன...

தந்தையின் சொல் இன்று மந்திரம்தான் என்று
கண்டதடி பிள்ளை எந்தன் உண்மை உள்ளமே
எந்தன் உள்ளம் எங்கும் அன்பு வெள்ளமே

சொந்தத்தில் பந்தத்தில் மோசத்தில் சோகத்தில் வந்து நின்று
உண்மைதனை இன்று உணர்ந்தேன்
இதை கண்டு கண்டு இன்று தெளிந்தேன்

பட்டது பட்டது என் மனம் பட்டதடி சுட்டது சுட்டது
சட்டிகள் சுட்டதடி விட்டது விட்டது கைகளும் விட்டதடி
கொட்டுது கொட்டுது ஞானமும் கொட்டுதடி
வானம் பார்த்து பறக்காதே
பூமியில் பிறந்தாய் மறக்காதே ஓ ஓ ஓ.

அண்ணன் என்ன தம்பி என்ன...
நம்பி நம்பி வெம்பி வெம்பி....
அண்ணன் என்ன தம்பி என்ன...

சி. மகாலட்சுமி, கோக்குவில் மேற்கு, கோக்குவில்.

# தேனீக்களின் அதிசய அரசாங்கம்!

**“மனிதர்களைப்போல அல்ல தேனீக்கள். தங்களுக்கு இட்ட பணியை மட்டுமே சிறப்பாகச் செய்பவை என்பதால் அங்கே சண்டை, சச்சரவு, கூச்சல், குழப்பத்திற்கே இடமில்லை”**

சமூகமாக வாழும் பூச்சிகளில் குறிப்பிடத்தக்கவை தேனீக்கள். குளவிகளைப் பொறுத்தவரை ஒரு தாய்க்குளவி நூற்றுக்கணக்கில் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்வதுடன் அதன் வாழ்க்கை முடிந்துவிடும். ஆனால், தேனீக்கள் வாழ்க்கை அப்படியல்ல. தேனீக்களின் ஒட்டுமொத்த கூட்டத்தையும் தனது உடம்பில் சுரக்கும் வாசனை திரவத்தின் மூலம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்கிறது ராணித் தேனீ.



### இயற்கையின் அற்புதம்...

மனிதர்கள் காலனி சமூகத்தை உருவாக்கும் முன்பே காலனி வாழ்க்கையை வாழத்தொடங்கியவை தேனீக்கள். தாங்கள் வசிக்க ஒரு கூடு, அதில் தங்குவதற்கு இடம், வெளியிலிருந்து எடுத்து வரும் தேனைச் சேமித்து வைக்க அறை, தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான பணிகளைச் செய்வதற்குப் பல்வேறு குழுக்கள் எனக் கட்டுப்பாடான வாழ்க்கையை வாழும் தேனீக்கள் இயற்கையின் அற்புதம் என்றால் மிகையில்லை.

தேனீக்கள் தங்களுக்காக மட்டும் வாழ்வதில்லை. இந்தப் பூவுலகு தேனீக்களால் பலனடைகிறது. பயிர்களில் மகரந்தச் சேர்க்கைச் செய்து மகசூலை அதிகரிக்கச் செய்வதில் தேனீக்களின் பங்கு முக்கியமானது. உழவர்களின் நண்பன் என்பது மண்புழுவுக்கு மட்டுமல்ல தேனீக்களுக்கும் பொருந்தும். தேனீக்களின் வாழ்க்கையை அதன் காலனிக்குள் இருந்து பார்த்தால் ஆச்சரியத்தில் மூழ்கிவிடுவீர்கள். அத்தனை அற்புதமான வாழ்க்கை தேனீக்களின் வாழ்க்கை. பொதுவாக, பூச்சிகளின் இனச்சேர்க்கை என்பது ஏதாவது ஒரு பொருளுக்கு மேல் இருக்கும். உதாரணமாக, ஒரு மரத்தின் மேல் பெண் பூச்சி இருப்பதாக வைத்துக்கொண்டால், அங்குதான் ஆண் பூச்சி அதனுடன் இணை சேரும். அதுபோல ஏதாவது ஒரு பொருளின் மீது பெண் பூச்சி இருக்கும்போதுதான் இனச்சேர்க்கை நடக்கும்.

### வானில் நடக்கும் தேனிலவு...

தேனீக்களின் இனச்சேர்க்கை அப்படியல்ல. அதன் இனச்சேர்க்கையே வித்தியாசமாக இருக்கும். பெரும் கோடீஸ்வரர்கள் சிலர் தங்கள் வீட்டு விசேஷங்களை விமானங்களில் பறந்தபடி நடத்துகிறார்கள் அல்லவா. அதுபோல தேனீக்களின் இனச்சேர்க்கை காற்றில் பறந்தபடியே வானத்தில் நடக்கும். இனச் சேர்க்கைக்குத் தயாரானவுடன் ராணித் தேனீ கூட்டைவிட்டு வெளியே பறக்கும். ராணித் தேனீ பறப்பதைப் பார்த்தவுடன் கூட்டில் உள்ள 100 ஆண் தேனீக்களும் அதன் பின்னால் படையெடுத்துச் செல்லும். அந்தக் கூட்டத்தில் எந்தத் தேனீ வீரமானதோ, வேகமானதோ, அது நடுவானில் ராணித் தேனீயுடன் இணைசேரும். ஆண் தேனீக்குப் பின்னால் 100 தேனீக்கள் பறந்தாலும், ராணித் தேனீயை எட்டி இனச் சேர்க்கை செய்வது 5 அல் லது 6 தேனீக்களாகத் தான் இருக்கும்.

ராணித் தேனீயுடன் இணைசேரும் ஆண் தேனீக்கள் இறந்துவிடும். இனச் சேர்க்கைப் பணி முடிந்தவுடன், ராணித் தேனீ கூட்டுக்கு வந்து சேரும். அப்படிக் கூட்டுக்கு வரும் ராணித் தேனீ நாளொன்றுக்கு 500 முதல் 2,500 முட்டைகள் வரை இடும். அந்தக் கூட்டில் உள்ள இடவசதி மற்றும் தேவைக்கு ஏற்ப முட்டைகளின் எண்ணிக்கை இருக்கும்.

காலனியில் உள்ள இடவசதி அங்குள்ள தேனீக்களுக்குச் சரியாக இருக்கிறது என்ற பட்சத்தில் முட்டையின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும். அதே நேரத்தில் அதிகம் இடம் இருக்கிறது என்றால் முட்டையின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்

### பெண்கள் அரசாங்கம்

குளவிகளைப்போலவே தேன் கூட்டிலும் பெண்கள் இராச்சியம் தான். ராணித் தேனீ இடும்முட்டைகள் 95 சதவிகிதம் பெண் தேனீக்களாகத் தான் வளர்ச்சியடையும்.5 சதவிகிதம் மட்டுமே ஆண் தேனீக்களாக வளர்ச்சியடையும். உதாரணமாக ஓர் கூட்டில் 20 000 தேனீக்கள் இருப்பதாக வைத்துக் கொண்டால் அதில் 19 000 தேனீக்கள் பெண் தேனீக்களாகத் தான் இருக்கும். மீதமுள்ள தேனீக்கள் மட்டுமே ஆண் தேனீக்கள். உணவுண்பது, ராணித் தேனீயுடன் இனச் சேர்க்கை செய்வதைத் தவிர அந்த ஆண் தேனீக்களுக்கு கூட்டில் வேறு எந்த வேலையும் இல்லை. கூட்டில் உள்ள 19 000 பெண் தேனீக்கள் அத்தனையும் இனப்பெருக்க உறுப்பு வளர்ச்சி அடையாத நிலையில் உள்ள வேலைக்காரத் தேனீக்கள் தான். அதனால் அவற்றால் இனப்பெருக்கம் செய்ய முடியாது. இந்த வேலைக்காரத் தேனீக்களுக்கு பல்வேறு விதமான பணிகள் ஒதுக்கப்படுகின்றன.ஒவ்வொரு பணிக்கும் ஒரு குழு இருக்கிறது. மனிதர்களைப்போல அல்ல தேனீக்கள். தங்களுக்கு இட்ட பணியை மட்டுமே சிறப்பாகச் செய்பவை என்பதால் அங்கே சண்டை, சச்சரவு, கூச்சல், குழப்பத்திற்கே இடமில்லை.

(தொடரும்...)

# கைராசி: கை சொல்லும் மந்திரம்



**கிராமப்புறங்களில் சிலரைப் பற்றி சொல்லும் போது "அவருக்கு என்னப்பா கைராசிக்காரர். தொட்டதெல்லாம் துலங்கும் விதைச்சதெல்லாம் பொன்னா விளையும்" என்று சிலாகிப்பார்கள். இப்படியான விசேஷ அம்சம் உங்கள் கைக்கும் இருக்கலாம்! இதுபற்றி, அங்கலட்சண சாஸ்திரம் தொடர்பான நூல்கள் சொல்லும் ரகசியம் என்ன என்று அறிவோமா?**

உள்ளங்கையைத் தரையில் வைத்து, விரல்களைச் சற்று அகற்றி வைத்துக்கொண்டு, கைகளின் மேற்புற அமைப்பைப் பார்த்து, வடிவமைப்பை நிர்ணயிக்க வேண்டும். இந்த வடிவங்களைப் பொதுவாக சாதாரண கை, சிறிய கை, மிகச் சிறிய கை, நீளமான கை, மிக நீளமான கை என ஐந்து விதமாக வகைப்படுத்துவார்கள்.

இங்கே பெரிய கை, சிறிய கை என்றதும், பெரியவர்களின் கை, சிறியவர்களின் கை என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. குறிப்பிட்ட வயதினருக்கு பொதுவாக கையின் அமைப்பு எப்படி இருக்கும் என்பதை நிர்ணயித்துக் கொள்ளவேண்டும்.

**சாதாரண கை:** இவர்கள் பொறுமைசாலிகள். வாழ்வில் கஷ்ட நஷ்டங்களை அறிந்தவராக இருப்பார்கள். திட்டமிடலும், எது சாத்தியமோ அதையே செயற்படுத்துபவராகவும் விளங்குவார்கள். நம்பிக்கைக்கு உகந்தவர்கள். சந்தர்ப்பத்துக்கு ஏற்ப வளைந்து கொடுத்து வாழ்வார்கள்.

**சிறிய கை:** திறமை மிகுந்தவர். முன்னுக்கு வரவேண்டும் எனும் ஆசை இருக்கும். ஆனாலும், சிந்திப்பதைச் செயற்படுத்தும் சாமர்த்தியம் குறைவுதான். தங்களுடைய தோல்விக்கு மற்றவர்களைக் குறை சொல்வார்கள். அதிர்ஷ்டத்தை நம்புபவர்களாக இருப்பார்கள்.

**மிகச் சிறிய கை:** இந்த அமைப்பு அபூர்வமாக அமையும். எதையும் சந்தேக கண்ணோட்டத்துடன் அணுகுவார்கள். திறமை இருந்தும், மற்றவர்களுக்குப் பயன்படாமல் போகும்.

**நீளமான கை:** மிகவும் திறமைசாலிகள். புத்தி சாதுர்யமும், துணிச்சலும் உள்ளவர்கள். வாழ்வில் உயர்வதற்காக கடுமையாக உழைப்பவர்கள். நேர்மையாளர்களாகவும், வெளிப்படையாகப் பேசுபவர்களாகவும் விளங்குவர். பிரச்சினைகளைச் சமாளிப்பதில் வல்லவர்கள். தலைவர்களாக இருக்கத் தகுந்தவர்கள். தனக்கும் பிறருக்கும் பயனுள்ளவர்கள். அதேநேரம், கர்வமும், பிடிவாதமும் இவர்களிடம் உண்டு.

**மிக நீளமான கை:** இதுவும் அபூர்வமான அமைப்பாகும். இவர்கள் முற்றிலும் வித்தியாசமானவர்கள். சுதந்திரப் பிரியர்கள். பிறரைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். கஷ்ட நஷ்டங்களை லட்சியம் செய்யாதவர்கள். அதிமேதைகளாகவும் விளங்குவார்கள். ஆனால், இவர்களைப் புரிந்துகொள்வது கடினம்.

இங்ஙனம் கைகளின் அமைப்பை வைத்து மட்டுமல்ல, விரல்களின் அமைப்பு, விரல்களில் உள்ள மச்சங்களின் அமைப்பைக் கொண்டும் பல விளக்கங்களைச் சொல்கிறது அங்கலட்சண சாஸ்திர நூல்.

## ஆச்சி அறிவுரை



# சினிமா படிப்பைக் கெடுக்குமா?

மாவை.நா.கஜேந்திரன்

## பேராண்டி...

நேற்றைக்கு ஒரு சினிமாப் படம் பார்த்தன். ரொம்ப நல்ல படமா இருந்தது. உனக்குத் தெரியும் தானே பாட்டிக்கு சினிமா பார்க்கிறது அவ்வளவு பிடிக்காது.

அந்தப் படம் இலங்கை ஆக்களின்ர கதை எண்டு விளம்பரம் போட்டாங்கள் பார்த்தன். நல்லாத்தான் இருக்குது.

"டூரிஸ்ட் பமிலி" தான் படத்தோட பெயர். யாழ்ப்பாணத்தில இருந்து தமிழ்நாட்டுக்கு இடம்பெயர்ந்து போகிற ஒரு சிறிய குடும்பம் அங்கை படுகிற பாடுகளையும் எதிர்கொள்ளுற பிரச்சினைகளையும் நகைச்சுவைப் பாங்கில ஈழத்தமிழர் படுகிற பாட்டை உணர்வுபூர்வமாக சொல்லியிருக்கினம்.

படத்திலை ஒரு சுட்டிப் பையன் வருவான். அவனின்ர பெயர் ஜீவந். அவனைப் பார்க்க எனக்கு உன்ர நினைப்புத்தான் வந்தது பேராண்டி.

வழமையா யாழ்ப்பாணத்துத் தமிழ் எண்டு, எங்கட பேச்சு வழக்கை மோசமாக காட்டுற தமிழ் சினிமாவில, யாழ்ப்பாணத்துப் பேச்சு மொழியை செயற்கை இல்லாமல் பேசி இருப்பது பாராட்ட வேண்டிய விடயம்.

இவ்வளவுக்கும் அந்தப் படத்தோட இயக்குநர் ஜீவந் வெறும் 25 வயதுப் பெடியன் எண்டதுதான் எனக்கு ஆச்சரியம்.

பள்ளிக்கூட லீவு நாளிலை அப்பாவக் கேட்டு அந்தப் படத்தைப் பார் பேராண்டி.

உன்ர மாமாவின்ர மகன் **A/L** சோதினையிலை **3A** ஆம். யாழ். மாவட்டத்திலை முதல் ராங்காம் எண்டு கொம்மா சொன்னவள்.

உன்னை நினைக்க தனக்குப் பயமா இருக்கெண்டும் ஒருவேளை நீ நல்ல ரிசல்ட் எடுக்காட்டி என்ன செய்யிறது எண்டும் பயப்பிட்டாள்.

இதுகளை நீ ஒண்டும் தலைக்குள்ள ஏத்தாதை பேராண்டி.

நல்லாப் படிக்கவேணும் எண்டு நினைச்சுப் படிச்சால் படிப்பு ஏறாது. படிக்கிறதை விளங்கிப் படிக்கவேணும். அப்பிடி விளங்கிப் படிச்சதை மீள மீளப் பயிற்சி செய்து பார்க்கவேணும். விளங்கிப் படிக்கிறதுதான் படிப்பு பேராண்டி.

பாடமாக்கிப்போட்டு சோதினையில போய் சத்தி எடுத்துப்போட்டு வாறது படிப்பே இல்லை.

சோதினையில வெற்றி பெற்ற பிள்ளைகளைப் பாராட்டுறது நல்ல விடயம்தான். ஆனால் தோல்வியடைந்த பிள்ளைகள் பற்றியும் சிந்திக்க வேணும். அதுகளின்ர மனநிலையையும் யோசிக்கவேணும். அதுகள் சின்னப் பிள்ளைகள். அதுகளின்ர மனசிலை கள்ளம் – கபடம் இல்லை.

தோல்வியடைந்தவர்களை நாங்கள் கண்டு கொள்ளாமல் விட, அதுகளின்ர மனம் பதைச்சுப் போடுமெல்லோ.

மனதளவிலை பாதிக்கப்படுகின்ற பிள்ளைகளை பெற்றோர் அரவணைச்சுக் கதைச்சாலே அதுகள் பழைய நிலைக்கு வந்துவிடுங்கள்.

சினிமா பார்த்தால் பிள்ளைகளின்ர படிப்பு கெட்டுப் போயிடும் எண்டுற சித்தாந்தத்தைத் தூக்கி எறியுங்கோ. எதுவும் அளவுக்கு மீறிப் போகக் கூடாது. ஏன், படிப்பும்தான்.

இந்தச் சூழலில அதுகளின்ர மனநிலையை சினிமா மாத்தி அமைச்சிடும். பிள்ளைகளுக்கு "டூரிஸ்ட் பமிலி" படத்தைப் போட்டுக் காட்டினால் கூட பரவாயில்லை.

**ஆச்சி வருவா...**



# சுண்டைக்காயின் மகிமை





உடல் எடையை அதிகரிக்க நாம் தேர்ந்தெடுக்க வேண்டிய முதல் உணவுப் பொருள் சுண்டைக்காய்! சுண்டைக்கும் உடல் எடைக்கும் என்ன தொடர்பு என்று நீங்கள் கேட்பது புரிகிறது! குடல் பகுதியில் உள்ள நற்கிருமிகளை அதிகரிக்கும் பெரும் பணியைச் சுண்டைக்காய் சார்ந்த உணவுகள் செய்வது குறிப்பிடத் தக்கது.

மேலும், சாப்பிடப்படும் உணவுகளின் ஊட்டம் முழுமையாக உட்கிரகிக்கப்படுவதற்கும் சுண்டையின் சாரங்கள் உதவும்! இரத்தச் சோகையை உண்டாக்கி உடல் சோர்வை வழங்கும் குடல் புழுக்களை நீக்கவும் சுண்டை உதவும்.

# சூயிங்கம் மெல்வது நல்லதா?



சூயிங்கம் மெல்வதால் பசி உணர்வு கட்டுப்படும். அதிகம் சாப்பிடுவது தவிர்க்கப்படுவதால், இது மறைமுகமாக எடைக் குறைப்புக்கு உதவும்.

டயட்டில் இருப்பவர்களுக்கு எதையாவது சாப்பிட வேண்டும் என்ற உணவுத்தேடல் இருக்கும். சூயிங்கம் மெல்வதால், அவர்களுக்கு அந்தத் தேடல் கட்டுப்படும்.

சிலருக்கு எப்போதும் வாய் துர்நாற்றம் இருக்கும். வாய் துர்நாற்றத்துக்கான காரணம் அறிந்து அதைச் சரி செய்ய வேண்டியது அவசியம். வாய் துர்நாற்றப் பிரச்சினைக்கு சூயிங்கம் மெல்வது தற்காலிக நிவாரணமாக இருக்கும். உமிழ் நீர் உற்பத்தியையும் அதிகரிக்கும்.

சூயிங்கம் மெல்வது மன அழுத்தத்தை ஓரளவு குறைக்கும். சுகர்ஃப்ரீ சூயிங்கம் மெல்வதால், பற்களில் சொத்தை உருவாவது தவிர்க்கப்படும். சாப்பாட்டுக்குப் பிறகு சுகர்ஃப்ரீ சூயிங்கம் மெல்வது, வாயைச் சுத்தப்படுத்துவதற்கு இணையானது. பற்களில் உணவுத்துகள்கள் தேங்காமல் தவிர்க்கும். அதுவே இனிப்பு சேர்த்த சூயிங்கம், பற்களின் ஆரோக்கியத்தை நிச்சயம் பாதிக்கும்.

# களைப்பைப் போக்கும் காலை உணவு



வேகமாக இயங்கும் அவசர வாழ்க்கையில் மாணவர்கள் முதல், பணிக்குச் செல்பவர்கள் வரை பலரும் காலை உணவைத் தவிர்த்தே வருகின்றனர். வேலைக்குச் செல்பவர்களும் பள்ளி, கல்லூரி செல்லும் மாணவர்களும் உடல் எடையைக் குறைக்க வேண்டும் என்று நினைப்பவர்களும் இந்த மாதிரியான தவறைச் செய்கின்றனர். காலை உணவை எடுக்காமல் இருக்கும் போது இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறைகிறது. மூளைக்குத் தேவையான ஆக்சிஜன் மற்றும் குளுக்கோஸின் அளவும் குறைந்துவிடும். இதனால், சீக்கிரமே களைப்புகள் ஏற்படும்.

வேலையில் முழுக்கவனம் செலுத்த முடியாமல் போகும். சிலருக்கு மயக்கம்கூட வரலாம். உணவை செரிக்கக்கூடிய, என்சைம் (நொதி) அளவை பாசல் ஆசிட் அவுட்புட் (BASAL ACID OUTPUT) என்போம். நாம் சாப்பிடுகிற உணவை செரிப்பதற்கு, இந்த "என்சைம்கள்" பயன்படுகின்றன. இந்த என்சைம்களின் சுழற்சி, உணவின் சுழற்சியுடன் சேர்ந்தே நடைபெறுகிறது. இந்த என்சைம்கள் இரவு நேரத்தில் குறைவாகவும், "பீக் அவர்ஸ்" என்று சொல்லப்படுகிற காலை 7 மணியில் இருந்து 11 மணிவரை, அதிகமாகவும் சுரக்கின்றன.

காலை உணவை உட்கொள்ளாமல் இருக்கும்போது இந்த நொதிகளின் சுரப்பு அதிகமாகி, வயிற்றின் சுற்றுப்பகுதிகளில் சின்னச் சின்ன காயங்களை ஏற்படுத்தும். தொடர்ச்சியாக உணவு உட்கொள்ளாமலேயே இருந்தால் "அல்சர்" எனப்படும் வயிற்றுப்புண் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். காலையில், மிகக் குறைந்த கலோரி அளவுள்ள உணவைச் சாப்பிடலாம். உதாரணத்திற்கு காலை வேளையில் ஒரு டம்ளர் பால், ஒரு வாழைப்பழம் அல்லது ஒரு பிரெட் துண்டு போதுமானது. இவை, உடலுக்குத் தேவையான கலோரியைத் தரும் என்பதால், இதையே தொடர்ந்து சாப்பிடலாம்.

அதிகக் கொழுப்புச்சத்து நிறைந்த உணவுகளையும், கார்போஹைட்ரேட் அதிகம் உள்ள உணவுகளையும் சாப்பிடுவதன் மூலம் இரத்தத்தில் உள்ள கொழுப்பின் அளவு மேலும் அதிகமாகி சோம்பலான உணர்வை ஏற்படுத்தலாம். காலையில் சாப்பிடாமல் இருக்கும் போது, மதிய வேளைகளில் அதிகமாக உணவு எடுத்துக்கொள்ள நேரிடும். இதனால், உடல் உறுப்புகளுக்கு பிரச்சினை ஏற்படுமே தவிர, உடல் எடை குறைய வாய்ப்பே இல்லை.

## சமைப்போம் சுவைப்போம்

### சிம்ளி உருண்டை



**தேவையானவை :**

1. கேழ்வரகு மா – 200 கிராம்
2. வேர்க்கடலை – 50 கிராம்
3. கறுப்பு எள் – 25 கிராம்
4. தேங்காய் – ஒரு மூடி (துருவிக்கொள்ளவும்)
5. கருப்பட்டி – 200 கிராம்
6. நெய் – 2 தேக்கரண்டி
7. ஏலக்காய் – 2 (பொடிக்கவும்)
8. உப்பு – ஒரு சிட்டிகை

### செய்முறை

கேழ்வரகு மாவுடன் சிறிதளவு தண்ணீர், ஒரு சிட்டிகை உப்பு சேர்த்து சப்பாத்தி மா போல் பிசைந்து கொள்ளவும். சூடான தாச்சியில் அந்த மாவை அடை போல் தட்டி நெய் விட்டு சுட்டெடுத்துக்கொள்ளவும். கல் உரல் அல்லது மிக்ஸியில் எள், வேர்க்கடலையை முதலில் போட்டு பொடியாக்கிக் கொள்ளவும். ஆறிய அடையைச் சிறிது சிறிதாகப் பிய்த்து, அதையும் போட்டு பொடித்துக் கொள்ளவும்.

அத்துடன் பொடித்த கருப்பட்டி, ஏலக்காய்த்தூள், தேங்காய்த் துருவல் சேர்த்து உருண்டையாக உருட்டிக்கொள்ளவும். இதை மாலை நேர சிற்றுண்டியாகப் பரிமாறலாம். ஒரு வாரம் வரையிலும் கெடாமல் வைத்திருக்கலாம்.

- **இரும்புச்சத்து மிகுந்த இந்த உருண்டை முடி உதிர்தலைக் குறைக்கும்.**
- **ராகி முதலில் இந்தியாவில் தோன்றி, பின்னர் அரேபியா, ஆபிரிக்கா வழியாக உலகெங்கும் பரவியது.**

# சென்னை அணி தோனியைத் தாண்டி யோசிக்க வேண்டும்




சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, முதல் அணியாக பிளே ஆப்ஸ் வாய்ப்பை இழந்து, நடப்பு ஐ.பி.எல் தொடரிலிருந்து வெளியேறியுள்ளது. சென்னை அணியின் வரலாற்றிலேயே நடக்காத காரியம் இது. ஏனெனில், தொடர்ச்சியாக இரண்டு சீசன்களில் பிளே ஆப்ஸ் வாய்ப்பை இழந்து சென்னை அணி வெளியே நின்றதே இல்லை. இதுதான் முதல் தடவை.

கடந்த சீசனில் சென்னை அணி ஏழு போட்டிகளில் வென்றது. கடைசி லீக்கில் பெங்களூருக்கு எதிரான போட்டியில் தோற்று வெளியேறியது. அதுவும், ரன்ரேட் அடிப்படையில்தான் அந்த நான்காவது ஸ்பாட்டை எட்ட முடியாமல் வெளியேறியது. இந்தத் தடவை அப்படி ஒரு காரணத்தைச் சொல்லிக்கொள்ளக்கூட வாய்ப்பில்லாமல் போய்விட்டது. ஆடிய பெரும்பாலான போட்டிகளில் தோல்வி மட்டுமே!

ஆரம்பத்திலிருந்தே இந்த சீசனில் சென்னை அணிக்கு எதுவுமே சரியாக அமையவில்லை. சென்னை அணியின் பெரிய பலமே ஓப்பனிங் கூட்டணிதான். வலுவான ஓப்பனர்களைப் பிடித்துவிட்டால், சென்னை அணி கோப்பையைத் தட்டிவிடும்.

டூப்ளெஸ்சிஸ் - ருத்துராஜ் கெய்க்வாட், டெவான் கான்வே - ருத்துராஜ் கெய்க்வாட் என கடந்த சில ஆண்டுகளின் ஓப்பனிங் கூட்டணி, செம ஹிட். சென்னை அணிக்கு சீசனையே வென்று கொடுத்த கூட்டணிகள், இவை. இந்த சீசனிலும் ருத்துராஜ் - கான்வே என்கிற அதே ஓப்பனிங் கூட்டணியை அப்படியே களமாட விட்டிருக்கலாம். தேவையில்லாமல் சொதப்பி, பிரச்சினையே இல்லாத இடத்தில் புதிய பிரச்சினையை உருவாக்கி விட்டனர்.

ருத்துராஜ் கெய்க்வாட், தாமாகவே முன்வந்து நம்பர் 3இல் ஆடப்போவதாகக் கூறினார். கான்வேயை பென்ச்சில் உட்கார வைத்தார்கள். ரச்சின் ரவீந்திராவையும் ராகுல் திரிபாதியையும் ஓப்பனிங் கூட்டணியாக இறக்கினார்கள். கான்வேக்கு பதில் ரச்சின் ரவீந்திரா என்பதைக்கூட ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், ருத்துராஜுக்கு பதில் ராகுல் திரிபாதி என்பதை ஏற்றுக் கொள்ளவே இயலவில்லை. திரிபாதி நல்ல வீரர்தான். ஆனாலும் ருத்துராஜுன் இடத்தை நிரப்பும் அளவுக்கான வீரர் இல்லை. அங்கே இருந்துதான் எல்லாப் பிரச்சினைகளும் தொடங்கின.

ஓப்பனிங் கூட்டணி எடுபடவில்லை. ருத்துராஜ் திடீரெனக் காயமடைந்து தொடரை விட்டு வெளியேறினார். மிடில் ஆர்டரில் எந்த வீரரும் நோக்கமே இல்லாமல்தான் ஆடினர். தோனி, விஜய் சங்கர், தீபக் ஹூடா, ஜடேஜா, சிவம் துபே என எந்த வீரருமே நவீன ரி-20 சூழலுக்கு ஏற்ப அதிரடியாக ஆடவே இல்லை அல்லது அவர்களால் ஆட முடியவில்லை. இதனால், கலீல் அஹமது, நூர் அஹமது என பௌலிங்கில் சிறப்பாகச் செயற்பட்ட வீரர்களின் அத்தனை பிரயத்தனங்களும் வீணாகின.

தொடர் தோல்விகளுக்கு அணியின் செயற்பாட்டை மட்டுமே காரணமாகக் கூறமுடியாது. அவர்கள் நம்பும் கருத்தாக்கத்திலேயே பிரச்சினை இருக்கிறது. இளம் வீரர்களை நம்பாமல் அனுபவமான வீரர்களை நம்புவதுதான் சென்னை அணியின் பாணி. அது அவர்களுக்கு வெற்றியையும் கொடுத்திருக்கிறது. கோப் பைகளையும் வென்றுள்ளனர். ஆனால், அதற்காக காலத்துக்கேற்ப மாற்றங்களையே செய்யமாட்டோம் என அடம்பிடிப்பதும் சரியான மனநிலை இல்லையே?

14 வயதே ஆன வைபவ் என்கிற சிறுவனை ராஜஸ்தான் அணி களம் இறக்கியிருக்கிறது. சதமெல்லாம் அடித்து அசத்துகிறார் வைபவ். அப்படியிருக்க இன்னும் இளம் வீரர்களுக்கு வாய்ப்பு கொடுக்க மாட்டோம் என வம்படியாக இருப்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

சாய் கிஷோர் தமிழக வீரர். இளம் இடதுகை சுழற்பந்து வீச்சாளர். அவர் சென்னை அணியில்தான் இருந்தார். நான்காண்டுகளாக அவரை பென்ச்சிலேயே உட்கார வைத்து ஏமாற்றி, வெளியே அனுப்பிவிட்டனர். குஜராத் அணி அவருக்கான வாய்ப்பை வழங்கியது. சாய் கிஷோர் இப்போது அங்கே மேட்ச் வின்னர்.

இளம் வீரர்களுக்கு வாய்ப்புக் கொடுக்காமல் தவறு செய்கிறோம் என்பதை சென்னை அணியினர் உணராமலேயே இருக்கின்றனர் என்பதுதான் அதைவிடப் பிரச்சினை. இளம் வீரர்கள் ஒரே பாணியில்தான் ஆடுவார்கள். அவர்கள் கடினமான சூழலில் எப்படி ஆடுவார்கள் எனத் தெரியாது என்று சென்னை அணியின் பயிற்சியாளர் ஸ்டீபன் ப்ளம்மிங் சாக்குப் போக்கு சொல்கிறார். அப்படி சென்னை அணி எந்த இளம் வீரரை இக்கட்டான சூழலில் இறக்கிவிட்டு ஏமாற்றம் அடைந்தது என்று தெரியவில்லை.

சென்னை அணியின் அடிப்படைப் பிரச்சினையே இதுதான். சென்னை அணி தோனியைத் தாண்டி யோசிக்க வேண்டும். தோனியின் ஆட்ட சித்தாந்தங்களைத் தாண்டிச் சிந்திக்க வேண்டும். அதுதான் சென்னை அணியின் எதிர்காலத்துக்கான தேவை!



# தெளிவே என் சிந்தனையுள்... 9

பண்ணையார் ஒருவரின் பல்லக்கைத் தூக்கும் தொழிலை நான்கு பேர் செய்து வந்தனர். அவர்களுக்கு நல்ல சம்பளத்தை கொடுத்து வந்தார் பண்ணையார். ஆயினும் அந்த நான்கு பேரிடமும் சுயநலப்போக்கு மேலோங்கியே இருந்தது.

ஒரு நாள் பண்ணையாரின் பசுக்கன்று கயிற்றை அறுத்துவிட்டு ஓடிவிட்டது. பல்லக்கு தூக்குபவர்களிடம் பசுவைப் தேடிப் பிடித்து வரும்படி பண்ணையார் கூறினார். அந்த நால்வரும் ஒன்று சேர்ந்து கொண்டனர். “நமது வேலை பல்லக்குத் தூக்குவது மாத்திரமே. இன்று மாட்டுக்கன்றைப் பிடித்துக் கொடுத்தால் இனிமேல் வேறு வேலைகளையும் பண்ணையார் தந்துவிடுவார்” என்று பேசிக்கொண்டனர். பண்ணையாரிடம் வந்து ஐயா! எங்களது வேலை பல்லக்குத்துக்குவது மாத்திரமே. அதற்காகவே நீங்கள் எங்களுக்குச் சம்பளம் தருகிறீர்கள். அதைவிட வேறு எந்த வேலையையும் எங்களால் செய்யமுடியாது என முடிவாகக் கூறினர்.

சற்றுநேரம் யோசித்த பண்ணையார், “ஓ... அப்படியா? சரி, பல்லக்கைத் தூக்குங்கள். மாட்டுக் கன்றை நான் தேடுகின்றேன்” என்றபடி பல்லக்கில் ஏறி அமர்ந்து கொண்டார்.

அன்பானவர்களே! இப்படித்தான் பலர் அதிகம் பேசி மாட்டிவிடுகிறார்கள்.

நாம் ஓரிடத்தில் பணி புரிகிறோம் என்றால் அந்தப் பணிக்கு முதலில் மதிப்பளிக்க வேண்டும். எமக்கு வேலை தருபவருக்கு விசுவாசமாக இருக்க வேண்டும்.

வெறும் சம்பளத்திற்காக மாத்திரம் எமது வேலை இருக்குமாக இருந்தால், நாமும் முன்னேற முடியாது. எங்களால் குறித்த நிறுவனமும் முன்னேறாது.

ஒருவேளை எமது சுயநலத்திற்காக மட்டும் நாம் அங்கு பணி புரிவோமாக இருந்தால் எமது பணியிடத்தை நிரப்ப வேறு ஒருவரை இறைவன் அனுப்பி வைப்பான்.

அப்போது எமது பணி அந்த நிறுவனத்திற்கு தேவையற்ற ஒன்றாகிவிடும்.



குருஜி



# காலம் பல கண்ட யாழ்.கோட்டை

54

## செங்கை ஆழியான்

கைதாகியுள்ள விடுதலைப் புலிகளின் அப்பெயர்ப் பட்டியலிலிருந்து ஐவரைத் தளபதி கிட்டு தேர்ந்தெடுத்தார். இப் பேச்சுவார்த்தைகளில் வடமராட்சிப் பொறுப்பாளர் சூசை தென்மராட்சிப் பொறுப்பாளர் கேடில்ஸ், வலிகாமம் பொறுப்பாளர் ஜொனி ஆகியோரும் கலந்து கொண்டனர். விடுதலைப் புலிகளின் முகாமில் விடுதலைப்புலிகள் வைத்திருந்த ஆயுதங்களை வாங்கிப்பார்த்த கப்டன் கொத்தலாவல வியப்புத் தெரிவித்தார்.

04.டிசம்பர்.1986 இல் கொழும்பிலிருந்து விஜேகுமாரதுங்கவுடன் 35 பௌத்த குருமார் உட்பட, 65 பேர் யாழ்ப்பாணத்திற்கு ஒரு பஸ்சில் புறப்பட்டு வந்தனர். அரசாங்கம் முதலில் இவர்களது பயணத்தைத் தடுத்த போதிலும் பின்னர் அனுமதித்தது.

ஆனையிறவுக்கு இப்பால் அவர்களை விடுதலைப் புலிகள் தம்முடன் அழைத்து வந்தனர். கைதிகளுடன் அவர்கள் அளவளாவினர். "எமது நிபந்தனையிலிருந்து இம்மியளவும் விலக மாட்டோம். எவ்வளவு காலம் சென்றாலும் சிப்பாய்களைக் கொல்ல மாட்டோம் என அவர்களிடம் கிட்டுத் தெரிவித்தார். அவர்கள் திரும்பிச் சென்றனர், 27, டிசம்டர் அன்று காங்கேசன் துறையில் கைதிகள் பரிமாற்றம் பற்றி அரசுக்கும் புலிகளுக்கும் ஒரு பேச்சுவார்த்தை நடந்தது காங்கேசன் துறைப் பட்டின சபை மண்டபத்தில் நடந்த இந்தக் கலந்துரையாடலின் வின்சன்ட் டெரேரா, கப்டன் கொத்தலாவல ஆகியோர் கலந்துகொண்டனர். தளபதி கிட்டு, அரசியற் பொறுப்பாளர் திலீபன், ரஹீம் ஆகியோரும் கலந்து கொண்டனர், நிபந்தனைப் படி கைதிகள் பரிமாற்றம் பின்னர் நிகழ்ந்தது.

1987 இன் ஆரம்பத்தில் யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகை தீவிரமாகியது, கோட்டை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களுடன் பொம்பர் விமானங்களும் ஹெலிகொப்டர்களும் யாழ்ப்பாண நகரத்தை அழிப்பதில் ஈடுபட்டன. ஏராளமான கட்டடங்கள் பலவும் அழிந்தன. கோட்டையைச் சுற்றியுள்ள கட்டடங்கள் பலவும் அழிந்தன. பெரிய தபாற்கந்தோர், வீரசிங்கம் மண்டபம் றீகல் தியேட்டர், நீதி மன்றங்கள், மாநகர சபை, சுப்பிரமணியம் பூங்கா என்பன கோட்டை இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டன.

சேதமடைந்த பெரிய தபாற்கந்தோர், வீரசிங்கம் மண்டபம் என்பனவற்றில் இராணுவம் சில வேளை வந்து தங்கிவிடலாம் எனக் கருதப்பட்டதால் அக் கட்டடங்கள் போராளிகளினால் தீயிட்டு அழிக்கப்பட்டன.

கோட்டையைச் சுற்றியுள்ள இரண்டு சிறிய இராணுவ முகாம்கள் விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவங்கள் குறிப்பிடத் தக்கவை. கோட்டைக்கு மேற்குப்பக்கத்திலுள்ள பொலிஸ் விடுதிகளில் இராணுவம் மினி முகாம் ஒன்றினை அமைத்திருந்தது.

(தொடரும்...)

# மரக்கலமல்ல.. மனக்கலம்

இரண்டாம்பாகம்




இப்படிச் சிலநாட்கள் பல விடயங்களைப் பற்றி விவாதித்த மஞ்சளழகி. பாரத நாட்டு மரக்கலக் கலையைப் பற்றியும் கடற்போர் முறைகளைப் பற்றியும் பல விடயங்களை அறிந்துகொண்டாள். அவள் மரக்கலக் கலையில் காட்டிய சிரத்தையைப் பற்றிக் கண்டியத்தேவன் பெரிதும் ஆச்சரியப்பட்டான்.

மரக்கலத்தைப் பற்றிய பல விடயங்களை அவள் ஏற்கெனவே அறிந்திருந்ததும் அவனுக்கு வியப்பாயிருந்தது. மரக்கலத்தைக் கட்டும் பெரும் பொறுப்புச்சுமை மஞ்சளழகியின் சம்பாஷணையாலும் சிரத்தையாலும் பெரிதும் மட்டுப் பட்டது.

கண்டியத்தேவனுக்கு. அடிக்கடி அவளைத் தளத்துக்கு அழைத்துச் சென்று மரக்கலத்தைத் தான் அமைக்கும் முறைகளைக் காட்டினான். மரக்கலத்தின் பாய் மரங்களையும் மரக்கலத்தின் வளைந்த ஓரங்களில் படுத்துக் கிடந்த பெரும் விற்களையும், வேல் வீசும் இயந்திரங்களையும், எரியம்பு வீசும் சாதனங்களையும், அவற்றை இயக்கும் முறைகளையும் விளக்கினான்.

கண்டியத்தேவன் திறமையைப் பெரிதும் பாராட்டினாள் மஞ்சளழகி. ஆனால் அந்தப் பாராட்டு தலை ஒப்பாத கண்டியத்தேவன், "என்னைப் பாராட்டிப் பயன் இல்லை மகாராணி! நீங்கள் பாராட்ட வேண்டியவர் இளையபல்லவர்." என்றான் ஒருநாள்.

"இளையபல்லவரா இந்த மரக்கலத்தை அமைக்கிறார்" என்று கேட்டாள் அவள். "அவருக்கு என்ன தெரியும் இதில்?"

"அப்படித்தான் நானும் முதலில் நினைத்தேன். தரைப்படையை நடத்தும் தலைவருக்கு மரக்கலத்தின் மர்மங்கள் எப்படித் தெரியும் என்று. ஆனால் அவருக்கு சகலதும் தெரிந்திருந்தது. அவரின் ஆலோசனைப்படியே இந்த மரக்கலத்தின் ஒவ்வோர் அணுவும் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது.

மஞ்சளழகி பிரமித்தாள். அத்துடன் கேட்டாள் இதை ஏன் புறாவைப் போல் அமைக்கின்றீர்கள் என்று.

இளைய பல்லவர் உத்தரவு . சுயபுத்தியோடு உத்தரவு போடுகிறாரா அவர்.முதலில் குடி வெறியில் ஏதோ சொல்கின்றார் என்று நினைத்தேன். பிறகு யோசித்துப் பார்த்ததில் மிகுந்த நினைப்புடன் அவர் முடிவுகளைச் செய்வது புரிந்தது.

இதற்கு என்ன பெயரிடப் போகிறீர்கள். கடற்புறா. என்று அதையும் இளைய பல்லவன் தான் சொன்னாரா?

ஆம். ஏன் அப்படிப் பெயரிட

## கடற்புறா

வேண்டும் . நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஊகம்தான் தான் என்று இழுத்தான் கண்டியத்தேவன். ஊகத்தைத் தான் சொல்லுங்களேன். என்று கேட்டான் மஞ்சளழகி. அவரும் காஞ்சனாதேவியும் முதலில் பாலூர்ப் பெருந்துறையில் சந்தித்தார்கள் என்று மென்று விழுங்கினான். தேவன்.

ஆமாம் அதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றேன். மஞ்சளழகி குரலில் மகிழ்ச்சியற்று இருந்தது. அவர்கள் வெளிநாட்டு பிரமுகர் வீதி மாளிகையில் இருந்த போது தூதுப் புறா ஒன்றை அநபாயர் அனுப்பினார்.

அநபாயரா? ஆம். சோழ மண்டலத்தின் இளவரசர். அந்தத் தூதுப்புறா மர்மத்தை விளக்கியவர் இளைய பல்லவர். அப்படியா?

ஆம்.அந்தப் புறா மிக அழகாக இருக்கும். ம்...ம்ம்..

அதைப்பற்றிச் சென்ற ஒரு வருடத்தில் பல முறை இளைய பல்லவர் பேசி இருக்கிறார். என்ன பேசி இருக்கிறார்? அந்தத் தூதுப்புறா அவர்கள் இருவரையும் இணைத்ததாக.

சரி. சொல்லும், அந்த நினைப்பின் அடையாளமாக, கடாரத்துக் கட்டழகியின் நினைவாக இந்தக் கடற்புறா சிருஷ்டிக்கப்படுகிறது என்பது என் ஊகம். மஞ்சளழகி கண்டியத்தேவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

(தொடரும்...)

# சினிமா

# முகம் 10; விஜய்!



சினிமா! சினிமா!

இப்போது பான் இந்தியா ஸ்டார் ஆகிவிட்ட நானி, சமீபத்தில் தன் படவிழா ஒன்றிற்காக சென்னை வந்தார். அப்போது அவர் நான் நடிக்கும் படத்துக்கு தெலுங்கு ரசிகர்களைக் கடந்து தமிழ் மற்றும் மலையாள ரசிகர்களும் சரியான விமர்சனத்தை முன்வைத்துவிடுகிறார்கள். என்னுடைய படங்களை எப்போதும் கொண்டாடுகிறார்கள். அதிலும் தமிழ் ரசிகர்களின் அன்பு எப்போதும் மகிழ்ச்சியானதாகவே இருக்கும் என்று மனம் திறந்து பேசியவர், தமிழ் எழுத்துகள் பொறித்த சட்டையை அணிந்திருந்தது கவனம் பெற்றது.





அமெரிக்காவில் ஏ.ஐ படித்துத் திரும்பியதிலிருந்து அதில் மிகவும் தீவிரமாகிவிட்டார் கமல்ஹாசன். நெருங்கிய நண்பர்களுடன் பேசும்போதெல்லாம் ஏ.ஐ முக்கியத்துவம் பற்றித்தான் அடிக்கடி குறிப்பிடுகிறாராம். அது சம்பந்தமான புத்தகங்கள் தான் இப்போது வீட்டிலும், காரில் வரும்போது வாசிக்கிற வகையிலும் அவரிடம் இருக்கின்றனவாம்.

சினிமா! சினிமா!

1. உலகின் எந்த மூலையிலிருந்தாலும் ஜூன் 22ஆம் திகதி பறந்து வீடு வந்து விடுவார். தன் பிறந்த நாளன்று அம்மாவின் பக்கத்தில் இல்லாமல் இருப்பதே இல்லை. அம்மா சமைக்கும் அசைவ உணவுகளுக்கு விஜய் அடிமை.

2. விஜய் அதிகம் பேசுவதில்லை எனச் சொல்வார்கள். ஆனால், வாதம் செய்யலாம். விவாதம் செய்வது பிடிக்காது. விவாதம் செய்யும் போது ஜெயிப்போம். ஆனால் நல்ல மனிதர்களை இழந்துடுவோம் என நண்பர்களிடம் பஞ்ச் வைப்பார். விஜயின் அமைதிக்கு இதுதான் காரணம்!

3. விஜய்க்கு நகைகள் மீது ஆசை கிடையாது. முன்பு இரண்டு மிகச் சிறிய நெளி மோதிரங்களை அணிந்திருந்தார். இப்போது அதுவும் இல்லை. முன்பு வெளியில் போனால் சிறப்பான உடைகளை உடுத்த விரும்புவார். இப்போது வெள்ளைச் சட்டையும் வெளிர் பழுப்பு நிற பேண்ட்டும் போதும் என்பார்.

4. சென்னைச் சாலைகளில் தானே கார் ஓட்டிச் செல்வதை விரும்புவார். ஆனால் உச்ச நட்சத்திரம், அரசியல் தலைவரான பிண்பு தவிர்த்து விடுகிறார். சாலை விதிகளைக் கடைப்பிடிப்பதில் கவனமாக இருப்பார். காரில் செல்லும்போது அதிகம் கேட்பது கண்ணதாசன், பட்டுக்கோட்டையார் பாடல்களைத்தான். இளையராஜாவின் இசையும் மனதிற்குப் பிடித்தமானது.

5. நெருக்கமான கல்லூரி நண்பர்களை செல்லமாகவும் பிரியமாகவும் அழைப்பது மச்சி. மற்றவர்களை எல்லாம் ஒருசேர அழைப்பது என்னங் கண்ணா... தன்னோடு ஆரம்பக்கட்டத்தில் சினிமாவில் பழகியவர்கள் கஷ்டப்பட்டால் அவர்களுக்கு ஒரு தொகையைக் கொடுத்து, வாய்ப்பு கிடைக்கும் வரை பயன்படுத்திக்கொள்ளச் செய்வார். அது வெளியே தெரியாமல் பார்த்துக் கொள்வதில் உறுதியாக இருப்பார்!

6. தன் வீட்டுக்கு வரும் நண்பர்களின் குடும்பத்திற்கு அவரே தோசை சுட்டுக் கொடுத்து உபசரிப்பார். அவர் தயாரிக்கிற காபி விசேட சுவை கொண்டது என்கிறார்கள்.

7. முன்பெல்லாம் ஷூட்டிங்கில் பிஸியாக இருந்தாலும் ஹோம் தியேட்டரில் ஏதாவது ஒரு ஆங்கிலப் படம் பார்த்துவிட்டுத்தான் தூங்குவார். அரசியலுக்கு வந்த பிறகு படம் பார்ப்பதை நிறுத்திவிட்டார். ரஜினியின் அண்ணாமலை: பட சபத வசனத்தை இப்போதும் ஏற்ற இறக்கத்தோடு பேசிக் காட்டுவார். லயோலாவில் படிக்கும் போது நடிக்கிற ஆசையை அப்பாவிடம் தயங்கித் தயங்கிச் சொன்னபோது பேசிக்காட்டியது அந்த வசனம்தான்.

8. பனையூர் வீட்டில் காலையில் எழுந்தவுடன் விளையாடுவது டென்னிஸ் தான். மகள் திவ்யா சாஷா மீது செல்லம் அதிகம். திவ்யா ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் அதற்கு மாற்று கிடையாது. நான்கு வயதிலேயே கம்ப்யூட்டரில் விளையாடும் அளவிற்கு ஆர்வமூட்டியவர். மகளோடு இருக்கும் தருணங்களில் குழந்தை விஜயைப் பார்க்கலாம்.

9. 25 வருடங்களுக்கும் மேலாக விஜயின் நிழலாகப் பயணிப்பவர் ராஜேந்திரன். முன்பு விஜயின் ஓட்டுநராக இருந்தவர், இப்போது பாதுகாவலராகவும், எந்நேரமும் உடன் இருப்பவராகவும் மாறி இருக்கிறார்.

10. செந்தூரப்பாண்டி மூலம் விஜயைப் பட்டிதொட்டியெங்கும் கொண்டு போனவர் விஜயகாந்த். அந்த நன்றிக்கடனை மறவாமல் அடிக்கடி அவரின் மகன் விஜயபிரபாகரனிடம் நலம் விசாரிக்கிறார். எந்நேரமும் என்னை அணுகுங்கள் என்ற அன்புக் கோரிக்கையையும் கப்டன் குடும்பத்திடம் வைத்திருக்கிறார்.

சினிமா! சினிமா!

அடுத்தடுத்து இடைவெளியில்லாமல் நடித்து வருகிறார் ரவி மோகன் ஜீனி, கராத்தே பாபு, பராசக்தி ஆகிய படங்கள் கைவசம் வைத்திருக்கும் ரவி, இதில் ஜீனியை முடித்துக்கொடுத்து விட்டார். இந்த நிலையில் டிக்கிலோனா, வடக்குப்பட்டி ராமசாமி என சந்தானத்தை வைத்து ஹிட்களைக் கொடுத்த கார்த்திக் யோகியுடன் கைகோக்கிறார் ரவி. சிவகார்த்திகேயனின் பரர்சக்தியை முடித்துக் கொடுத்து விட்டு, கார்த்திக் யோகியின் படத்திற்கு வருவாராம்.



சினிமா! சினிமா!



திருமணத்துக்குப் பிறகு பஞ்சாபில் இருந்தார் ரம்யா பாண்டியன். இப்போது சென்னைக்கு வந்து விட்டார். மீண்டும் விதவிதமான போட்டோ ஷூட்டில் இறங்கி விட்டார். அதை இணையதளத்தில் பதிவிட்டு வருகிறார். கொஞ்சம் இடைவெளிக்குப் பிறகு மீண்டும் நடிப்பைத் தொடர ஆரம்பிக்கப் போகிறார் என்பதற்கான அடையாளம்தான் இந்தப் போட்டோ ஷூட் என்கிறார்கள்.



இப்போது தமிழ் சினிமாவில் அல்லும் பகலும் நடித்துக்கொண்டிருப்பவர் தனுஷ்தான். சென்னைக்கும் மும்பைக்குமாக விமானத்தில் பறந்து கொண்டே இருக்கிறார். "இட்லி கடை" படத்தின் சில காட்சிகளுக்காக பாங்ஹொக் வரை போய்விட்டு வந்து, உடனே ஹிந்தியில் நடித்துவரும் படத்துக்காக மும்பைக்குப் பறந்து விட்டார். இதற்கு நடுவே அடுத்த படத்துக்கான ஸ்கிரிப்ட்களில் பிஸியாக இருக்கிறார். போயஸ் கார்டனில் புது வீடு குடி புகுந்த நேரத்திலிருந்து ஓயாத படப்பிடிப்பில் இருக்கிறார் என்கிறார்கள்.

சினிமா! சினிமா!

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

449

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## உலக பேறு கால மன நல தினம் - 07 மே 2025

(சென்றவாரத் தொடர்ச்சி...)

முதலீட்டுக்காக அயலவர்களிடமிருந்தும் கடைக்கு வந்து சென்றவர்களிடமிருந்தும் பணத்தினைக் கடனாகப் பெற்றுள்ளார். அத்தகைய கடன்களின் வட்டி என்பது வளர்ந்து மிக அதிகமாகக் காணப்பட்டுள்ளதுடன் மாதா மாதம் அவ்வட்டியினைச் செலுத்தும் படியும் அவர் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்.

இத்தகைய காலப்பகுதியில் கணவனை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு வேறு சிலரிடமும் கடன்களைப் பெற்று முயற்சித்துள்ளார். இருந்த போதிலும், அந்த வெளிநாட்டு பயணம் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளது. பிற நாடொன்றுக்கு ஒரு ஏஜென்சியினால் கூட்டிச் செல்லப்பட்ட கணவன் நோக்கம் நிறைவேறாமல் இடைநடுவே திரும்பியுள்ளார். இதனால் அவர்களது குடும்பம் மேலும் கடன் சுமைக்கு ஆளாக நேர்ந்துள்ளது.

கடன் தொல்லைகளின் தொடர்ச்சியாகவும் அதனால் ஏற்பட்ட நெருக்கடி நிலையிலும் கணவனின் நேரடி ஆதரவு இல்லாதமையினாலும் கடையினை மூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் கடன் கொடுத்தவர்கள் கடனை மீள அடைக்கும் படியும் வட்டியைக் கட்டும் படியும் தொடர்ச்சியாகத் தொந்தரவு செய்துள்ளனர். அதனால் மனம் குழம்பி நெருக்கடிக்குட்பட்ட அவர் மிதமான மனச் சோர்விற்குள்ளாகியுள்ளார். நெருக்கடி நிலையைச் சமாளிக்கும் முகமாக யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து மல்லாவிக்கு குடும்பமாகச் சென்றுள்ளார். மல்லாவிக்கு சென்று வாழும் வேளையில் ஓரளவு அவரது மனச் சோர்வு நிலை குறைவடைந்து சென்றுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. அங்கு அவர் கர்ப்பம் தரித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து சில மாதங்களில் மீளவும் சொந்த இடத்திற்கு திரும்பியுள்ளார். அங்கு அவரது மூத்த மகனைப் பாடசாலை ஒன்றில் சேர்த்ததுடன் ஒழுங்காக யாழ் போதனா வைத்தியசாலையில் பேறுகால மருத்துவ சிகிச்சைகளை தொடர்ச்சியாகப் பெற்று வந்துள்ளார். இக்காலப்பகுதியில் கடன் பிரச்சினையில் மீளக்கட்டப்படாத வட்டியினையும் சேர்த்து மீளச்செலுத்தப்பட வேண்டிய தொகை அதிகரித்துள்ளது. இதனால் சில நகைகளை அடகுவைத்தே தனது வட்டிகளை மட்டும் ஓரளவு கட்டி வந்துள்ளார். அத்துடன் கணவனை ஒரு சிறிய நாட்டிற்கு அனுப்புவதற்காக நான்கு லட்சம் ரூபாயளவிலான பணத்தினையும் தேடும் முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

இத்தகையதான நேரத்திலேயே சத்திரசிகிச்சை மூலம் யாழ் போதனா வைத்தியசாலையில் இவரது இரண்டாவது பிரசவமும் நடந்தேறியுள்ளது. கர்ப்பமாக இருந்த காலத்திலும் அதற்கு முன்னமும் நெருக்கடியான சூழ்நிலையில் இவர் உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சி செய்த போதிலும் குடும்ப உறவினர்களால் காப்பாற்றப்பட்டுள்ளார். குழந்தையோடு வாழ்ந்து கொண்டிருந்த மகப்பேற்றுக்கு பின்னரான காலப்பகுதியிலும் கடன் கொடுத்தோரின் தொல்லை அதிகமாகக் காணப்பட்டதுடன் பல தடவைகள் தகாத வார்த்தைகளால் நச்சரிக்கப்பட்டுத் துன்பத்தை எதிர்கொண்டுள்ளார்.



இந்த நெருக்கடிகளைத் தொடர்ந்தும் சற்று மனம் குழம்பியவராகவும் பிள்ளை பராமரிப்பில் அசண்டையீனமாகவும் இருந்துள்ளமை தெரிய வந்துள்ளது. சில வேளைகளில் பால் கொடுப்பதற்கும் அசண்டையீனமாக இருந்துள்ளார். இரு மாதங்களுக்குப் பால் கொடுத்த பின்பு தனக்குப் பால் வருவது குறைவாக இருப்பதாகச் சொல்லிப் பால் மாவினை அதற்கு பிரதியீடாக வழங்கியுள்ளார். தன் உயிரை மாய்த்துக் கொள்வதற்கு முந்தைய தின திகதியிடப்பட்ட நீண்ட குறிப்பினை அப்பியாசக் கொப்பியில் எழுதியுள்ளார். அதற்கு மறுநாள் வழமையை விட அழகான சேலையை உடுத்திப் பிள்ளையைப் பாடசாலையில் விட்டு விட்டு வந்துள்ளார். மீண்டும் பதினொரு மணியளவில் பரீட்சை அறிக்கையை எடுத்துக் கொண்டு பிள்ளையைத் தன் அண்ணனின் வீட்டில் விட்டு விட்டு வந்துள்ளார். அதன் பின்பு யாருமே இல்லாத தன்னுடைய வீட்டிற்குச் சென்றுள்ளார். மதியம் பன்னிரெண்டு மணியளவில் அவ்வீட்டினுள் தன் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். மேற்குறிப்பிட்ட பதிவிலிருந்து, அந்தப் பெண் மனச்சோர்வு என்ற உள நோயினால் பாதிக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது. அதிலிருந்து தானாகவே மீண்டுவர வேண்டுமென அப்பெண் போராடியுள்ளார். ஆனால் அப் பெண் தனது செயற்றிறன் குன்றியிருந்தமையாலும் அதற்குரிய ஆதரவினைப் பெற்றுக் கொள்ளாமையினாலும் மனச்சோர்வு நிலை தீவிரமாகியுள்ளது.

அத்தகைய நிலையில் அவள் தவறான முடிவை எடுத்துள்ளமை தெளிவாகிறது. இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது என்ன? எவை?

1. பேறுகாலத்தில் அதிகம் மனச்சோர்வு ஏற்படுகிறது.

2. போதுமான ஆதரவு வழங்கும்போது அவரை அம் மனச் சோர்விலிருந்து வெளிக் கொண்டு வர முடியும்.

3. ஆனால் மனச்சோர்வு நோய் அதிகரித்துத் தீவிரமாகச் செல்லும் பட்சத்தில் தலையீடு செய்வது அவசியமானது.

4.மனச்சோர்வுக்கு ஆளான தாய்க்குப் பல வழிகளிலும் உதவி செய்ய வேண்டியது மற்றவர்களின் கட்மையாகும். அதைவிட மானசீகமாக அவர்களைப் புண்படுத்துவதைத் தவிரக்க வேண்டும்.

5. தொடக்கத்திலேயே மனச்சோர்வு நோயினை அடையாளங் கண்டால் அதனை மருத்துவச் சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும்.

6. தன்னுயிர் மாய்ப்புக்கு முயற்சி செய்கின்றமை எதிர்கால உயிர்மாய்ப்புக்குக் கட்டியம் கூறுவதாக அமையும் ஆதலினால் அதனை அசண்டையீனமாக எடுத்துக் கொள்ளாது முறையான தலையீட்டினை மேற்கொள்ள வேண்டும். (தற்போதைய குடும்ப நிலைமைகள் பற்றிய ஒரு அறிவையும் தெளிவையும் மேற்குறிப்பிட்ட பதிவு உங்களுக்குத் தந்திருக்கக் கூடும். ஒரு சமூக அறிவூட்டல் என்ற அடிப் படையிலேயே அச் சம்பவம் இங்கே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.) (முற்றும்.)

Dr.சி.சிவதாஸ்
(உள மருத்துவ நிபுணர்)

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

## ஏழாலை-அத்தியடி முருகமூர்த்திக்கு தேர் இன்று

(யாழ்ப்பாணம்)

ஏழாலை அத்தியடி முருக மூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவத் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளதுடன் இம்முறை புதிய சிந்திரத்தேரில் முருகப் பெருமானின் வீதியுலா இடம்பெறவுள்ளது. அத்துடன் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (3-8)

## சங்கடஹர சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபபூஜை என்பன இடம்பெற்று விநாயகப் பெருமானின் திருவீதி யுலாவும் இடம்பெறும் என பிரதம குருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக்குருக்கள் தெரிவித்துள்ளார். (3-8)

# இளம் தலைமுறை இணைந்து கூட்டுறவு துறையை வளர்க்க வேண்டும்

## அரிசி மாபியாக்களைக் கட்டுப்படுத்த ஆளுநர் அழைப்பு

**(யாழ்ப்பாணம்)**

**கூட்டுறவுத்துறையை வலுப்படுத்துவதன் ஊடாக அரிசி மாபியாவை எதிர்காலத்திலாவது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**



இளம் ஆய்வாளர்கள் வலையமைப்பு நடத்திய இளம் கூட்டுறவாளர் மாநாடு தந்தை செல்வா அரங்கில் நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தெரிவிக்கையில் அரிசி மாபியாவைக் கட்டுப் படுத்துவதற்காக, கூட்டுறவு அபிவிருத்தி வங்கி ஊடாக நெல் கொள்வனவுக்கு நாம் கடன்களை வழங்குகின்றோம். நெல்லுக்கான நிர்ணய விலையை விட கூடுதலான விலைக்கு விவசாயிகளிடமிருந்து வேறு மாகாண தனியார் அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லைக் கொள்வனவு செய்ய விவசாயிகளும் தமக்கு கூடுதலான இலாபம் கிடைக்கின்றது என விற்பனை செய்கின்றார்கள்.

இவ்வாறு கொள்வனவு செய்யும் நெல்லை பதுக்கி வைத்திருந்து, அரிசிக்கான விலையை தீர்மானிப்பவர்களாக மாறுகின்றார்கள்.

இவ்வாறு தனியார் அரசியின் விலையை தீர்மானிப்பதை மாற்றியமைப்பதற்கு எமது கூட்டுறவு அமைப்புக்களை வலுப்படுத்த வேண்டும். அவர்கள் எங்கள் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்து சிறியதொரு இலாபத்துடன் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக சந்தை விலையை விட குறைந்த விலைக்கு விற்பனை செய்யும்போது மக்கள் பயனடைவார்கள். அரிசி மாபியாவையும் கட்டுப்படுத்த முடியும்.

இவ்வளவு வலிமையான கூட்டுறவுத்துறையை மீண்டும் வளர்த்தெடுப்பதற்கு தலைமைத்துவப்பண்புள்ள இளையோர் அதிகளவில் இணைந்து கொள்ளவேண்டும். இங்கு வடக்கு, கிழக்கு, மலையகத்தைச் சேர்ந்த இளையோர் இணைந்திருப்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நீங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு கூட்டுறவுத்துறையைப் பலப்படுத்த வேண்டுமென ஆளுநர் தெரிவித்தார். (6-8)

# அதிகார கதிரைக்கு இல்லாத தூய்மையான அழைப்பாக இருந்தால் தமிழ்த்தேசிய பேரவை ஆதரவளிக்கும்



(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் முடிவுகள் தமிழ்த் தேசிய நிலைப் பாட்டுடன் பயணிக்கும் மக்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி என்பதுடன் அதற்கு கிடைத்த ஆணையாகவும் அமையுமென பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

நடந்துமுடிந்த பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசிய பாதையிலிருந்து தமிழ் மக்கள் படிப் படியாக விலகி வருகின்றார்கள் என்று ஒரு செய்தி பரப்பப்பட்டு வந்தது.

இவ்வாறான ஒரு காலச் சூழலில் பிரதேசத்தின் அபிவிருத்தியை முன்நிறுத்திய ஒரு தேர்தலில் மக்கள் தமிழ் தேசியத்தை முன்னிறுத்தி வாக்களித்து வெற்றிபெறச் செய்துள்ளனர்.

இதனூடாக வடக்கு, கிழக்கில் தென் இலங்கை இனவாதிகளுக்கு இடம் கொடுக்கப்படாது என்பதை ஆட்சியாளர்களுக்குத் தமிழ் மக்களால் உணர்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ்த் தேசியப் பரப்பில் அநேக பிரதேசங்களில் தமிழ்த் தேசியம் வெற்றிபெற்றுள்ள போதும் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையில் பின்தங்கிய போக்கே இருக்கின்றது.

தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவது காலச் சூழலுக்கு தேவையான ஒன்றாகும்.

இதனால் தமிழ்த் தரப்பு ஆட்சி அமைக்க நாம் தமிழ் அரசு கட்சிக்கும் கொள்கை நிலைப்பாட்டுடன் நின்று ஆதரவைக் கொடுக்க பின் நிற்கமாட்டோம்.

மேலும் ஒற்றுமையை வலுப்படுத்த தமிழ் அரசியல் பரப்பில் உள்ள பலதரப்பட்டவர்களுடனும் பேசியிருந்தேன். அதற்கான சாதக பெறுபேறும் கிடைத்தது.

குறிப்பாக ஆட்சி அதிகாரக் கதிரைக்கான தேசியமாக ஒற்றுமையாக இல்லாது தூய்மையான ஆதரவுக்கான அழைப்பாக இருந்தால் அந்த அழைப்புக்கு தமிழ் தேசியப் பேரவை ஆதரவு கொடுக்கும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். (6-8-33)

# ப.நோ.கூ. சங்கங்களில் ரூ.179 உப்பு விநியோகம்

## வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

உப்பின் விலை கட்டுப் பாடற்ற ரீதியில் அதிகரித்துள்ள நிலையில், அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மன்னாரில் உப்பைக் கொள்வனவு செய்து நேற்று யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விநியோகித்துள்ளது.

வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

179 ரூபாவுக்கு ஒரு பக்கெட் உப்பை பொது மக்கள் கொள்வனவு செய்ய முடியும் எனவும் ஒருவர் ஆகக் கூடியது 3 உப்பு பக்கெட்களையே கொள்வனவு செய்ய முடியும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6-8)

# நிலத்தை பதப்படுத்திய விவசாயிகள் மூவர் கைது

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு குருந்தூர் மலை அடிவாரத்தில் உள்ள வயல் நிலங்களில் விவசாயம் செய்யும் பொருட்டு அதை உழவியந்திரம் மூலம் நிலத்தைப் பதப் படுத்திய விவசாயிகள் மூவர் நேற்று காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குமுழமுனை தண்ணிமுறிப்புக் குளத்தின் கீழான நீர்ப் பாசனத்தின் ஊடாக விவசாயம் செய்யும் நோக்கில் குறித்த காணியின் உரிமையாளர் நேற்றுக் காலை தனது பணியாட்கள் மூலம் உழவு செய்துள்ளார்.

இதன்போது அவ்விடத்துக்கு வருகை தந்த குருந்தூர் மலை பௌத்த பிக்கு மற்றும் தொல்லியல் திணைக் களத்தினர், பொலிஸார் இணைந்து விவசாய நடவடிக்கைகளை தடுத்ததோடு விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகளையும் கைது செய்து, உழவியந்திரத்தினையும் பறிமுதல் செய்து முல்லைத் தீவு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளனர். (6-8-299)

# போரை நிறுத்தி பேச்சுவார்த்தை நடத்துங்கள்

## இந்தியா-பாகிஸ்தானுக்கு ஜி 7 நாடுகள் வலியுறுத்தல்

(வோஷிங்டன்)

**இருதரப்பும் தாக்குதலை நிறுத்திவிட்டு, உடனடியாக நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு ஜி7 நாடுகளின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.**




பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதலை நடத்தி வருகிறது. அந்த நாட்டின் 3 இராணுவ தளங்களை குறி வைத்து தாக்கியதாக கூறப்படுகிறது. மேலும், இந்திய நிலைகள் மீது நடத்தப்படும் ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதலை இந்திய இராணுவம் துல்லியமாக முறியடித்து வருகிறது.

அதேவேளையில், ஜம்மு காஷ்மீர், குஜராத், பஞ்சாப் ஆகிய மாநிலங்களை குறிவைத்து பாகிஸ்தான் இராணுவமும் தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகிறது. இந்த சூழலில், இருதரப்பும் தாக்குதலை நிறுத்திவிட்டு, உடனடியாக நேரடி பேச்சு வார்த்தையில் ஈடுபடுமாறு இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு ஜி7 நாடுகளின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக, ஜி7 நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் உயர் பிரதிநிதிகள் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது: கடந்த ஏப்.,22 ஆம் திகதி நடத்தப்பட்ட பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம். இருநாடுகளின் மோதல் காரணமாக பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன. எனவே, இந்தியாவும், பாகிஸ்தானும் அதிகபட்ச தாக்குதலை நிறுத்த வேண்டும்.

இருநாடுகளில் உள்ள மக்களின் பாதுகாப்பில் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளோம். உடனடியாக தாக்குதலை நிறுத்தி விட்டு, இருநாடுகளும் அமைதியான நிலைமைக்கு திரும்புவதற்காக நேரடி பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

நாங்கள் தொடர்ந்து நிலைமையை கண்காணித்து வருகிறோம். தூதரக ரீதியாக தீர்வு காணத் தயாராக இருக்கிறோம், என தெரிவிக்கப்பட்டுள்ளது.(நி-8)

# சீனா, துருக்கி, அஜர்பைஜான் ஆகிய நாடுகள் எமக்கு ஆதரவு

## பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர்

(இஸ்லாமாபாத்)

இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கிடையிலான மோதலில் பாகிஸ்தானுக்கு சீனா, துருக்கி மற்றும் அஜர்பைஜான் ஆகிய நாடுகள் தெளிவான ஆதரவை வழங்க முன்வந்துள்ளதாகப் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிஃப் அந்நாட்டு பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தியாவுடனான மோதல் நிலைமை குறித்து ஈரான், ஐக்கிய அரபு இராச்சியம், சவுதி அரேபியா, சீனா, கட்டாருடன் பாகிஸ்தான் அரசு தினசரி தொடர்ந்து தொடர்பு கொண்டு கலந்துரையாடி வருகின்றது என்றும் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்

அத்துடன், இஸ்ரேலைத் தவிர இந்தியாவுக்கு எந்த நாடும் ஆதரவாக இல்லை என்றும் உலகின் பெரும்பாலான நாடுகள் இந்த விவகாரத்தில் நடுநிலை வகிக்கின்றன என்றும் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கிடையிலான போர்ப்பதற்றம் தொடர்ந்து நீடித்து வருகின்ற நிலையில், இரு நாடுகளும் போர்ப்பதற்றத்தை தணிக்க வேண்டும் என உலகின் பெரும்பாலான நாடுகள் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(நி-8)

# ஆப்ரேஷன் சிந்தூர் தாக்கம் கண்ணீர் விட்ட பாகிஸ்தான் எம்.பி

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தான் இராணுவத்தில் மேஜராகப் பணியாற்றியவர் தாஹிர் இக்பால். தற்போது பாகிஸ்தானில் ஆளும் பாகிஸ்தான் முஸ்லீம் லீக் கட்சியின் மூத்த தலைவராகவும் எம்.பி.யாகவும் இருக்கிறார். பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் நடத்த தொடங்கிய போது, கடந்த 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அவர் பேசினார்.

தாஹிர் இக்பால் பேசும் போது, "இந்தியாவின் தாக்குதலில் இருந்து பாகிஸ்தானை இராணுவம் காப்பாற்ற வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் பாகிஸ்தானின் அனைத்து எம்.பி.க்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று வேண்டுகிறேன். கடவுளிடம் பிரார்த்தனை செய்யுங்கள். ஓ அல்லா. உமக்கு முன்னால் நாங்கள் தலை வணங்கி நிற்கிறோம். தயவு செய்து இந்த நாட்டைக் காப்பாற்று" என்று உணர்ச்சியை கட்டுப்படுத்த முடியாமல் அழுதபடியே பேசினார். அவரது பேச்சு சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவியது. (நி-8)

# இந்தியாவின் எதிர்ப்பை மீறி

## பாகிஸ்தானுக்கு கடன் கொடுக்கும் ஐ.எம்.எப்

(வோஷிங்டன்)




மூழ்கி வரும் பொருளாதாரத்தை சீரமைக்க, பாகிஸ்தானுக்கு 1 பில்லியன் டொலர் கடன் கொடுக்க, ஐ.எம்.எப்., ஒப்புதல் அளித்துள்ளது.

ஐ.எம்.எப்., எனப்படும் சர்வதேச நாணய நிதியத்திடம், மூழ்கி வரும் பொருளாதாரத்தை மீட்டெடுக்க, 1 பில்லியன் டொலர் கடன் கேட்டிருந்தது பாகிஸ்தான். ஆனால், ஐ.எம்.எப்., வழங்கும் நிதியை பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தான் பயன்படுத்துவதாக, இந்தியா குற்றம் சாட்டி, அதற்கான வாக்கெடுப்பைப் புறக்கணித்தது.

இருப்பினும், இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி, பாகிஸ்தானுக்கு 1 பில்லியன் டொலர் கடன் கொடுக்க ஐ.எம்.எப்., சம்மதம் தெரிவித்ததாக, பாகிஸ்தான் அறிவித்துள்ளது. ஐ.எம்.எப்.,க்கு, பாகிஸ்தான், பிரதமர் ஷபாஸ் ஷெரீப் நன்றி தெரிவித்துள்ளார். (நி-8)

# 8000 எக்ஸ் தள கணக்குகள் இந்தியாவில் முடக்கம்!

(டில்லி)

ஆப்ரேஷன் சிந்தூரைத் தொடர்ந்து இந்தியா -பாகிஸ்தான் இடையே நேரடி தாக்குதல்கள் தொடங்கியுள்ளதால்

அங்கு இரு நாடுகளுக்கும் இடையில் போர்ப்பதற்றம் உருவாகியுள்ள நிலையில் இரு நாடுகளும் மோதலை தவிர்க்குமாறு பல்வேறு நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில் இந்தியா - பாகிஸ்தான் மோதல் தொடர்பாக எக்ஸ் சமூகவலைத்தளத்தில் பல்வேறு தகவல்கள் பரவி வருகின்றன.

இதில் பெரும்பாலானவை தவறான தகவல்கள் எனவும், தவறான தகவல்களை பரப்பும் 8 ஆயிரம் கணக்குகளை முடக்க எக்ஸ் தளத்திற்கு இந்திய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்திய மத்திய அரசின் உத்தரவையடுத்து அந்த கணக்குகளை எக்ஸ் தள நிறுவனம் முடக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.(நி-8)

அன்பின் வழிப்பட்ட காரியங்கள் செய்யும் அழகிய வாழ்க்கை வாழுங்கள். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சர்வதேச நாடுகள் ஒருபோதும் சண்டையை நிறுத்த மாட்டா

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலக நாடுகள் சமாதானத்துக்கான சபை தேவையென முடிவு செய்தன. அதன் விளைவாகவே ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. எனினும் வல்லவன் பம்பரம் மணலிலும் சுற்றும் என்பது போல ஐநா சபையிலும் வல்லவர்களின் ஆதிக்கம் பாதுகாப்புச் சபை. வீற்றோ அதிகாரம் என்பவற்றினூடு கோலோச்ச ஐ.நா சபையாலும் சமாதானத்தை ஏற்படுத்த முடியாமல் போயிற்று.

இதனாலேயே ரஷ்ய – உக்ரைன் போர், இஸ்ரேல் – காஸா யுத்தம் என்பவற்றைத் தடுக்க முடியவில்லை.

இது ஒரு புறம் இருக்க நாடுகளுக்கு இடையே போரை மூட்டி விடுவதில் வல்லரசு நாடுகள் கொண்டுள்ள மறைமுக ஆர்வம் இலட்சக்கணக்கான மனித உயிர்களைக் காவு கொள்கிறது. நிலைமை இதுவாக இருக்கையில், உலகில் எங்கேனும் யுத்தம் மூண்டால் சமாதானத்தை ஏற்படுத்தவல்ல நாடாக இந்தியா இருக்கிறது என்று நம்பி இருந்த வேளையில், இந்திய – பாகிஸ்தான் போர் தொடங்கியிருப்பது இருந்த நம்பிக்கையையும் தகர்ப்பதாயிற்று.

இப்போது உலகம் முழுவதிலும் இந்திய – பாகிஸ்தான் போர் பற்றியதே பேச்சு.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் உற்று அவதானிக்க வேண்டும். அதாவது, பாகிஸ்தானின் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் அதற்கான இந்தியாவின் பதிலடி, என்பதாக உலகம் விவாதிக்கின்றதே தவிர, தாக்குதல்களில் உயிரிழந்த பொதுமக்கள் பற்றியோ, தாக்குதலால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புகள் பற்றியோ சிந்திப்பதற்கான மனநிலை எவரிடமும் இல்லை என்பது தெரிகிறது.

இது தவிர போரை நிறுத்தாவிட்டால் இன்னும் எத்தனையோ அப்பாவி மக்கள் போருக்கு இரையாகக் காத்திருக்கின்றனர் என்ற உண்மையும் உறங்கிக் கொள்கிறது.

ஆக, வீடெரிக்கின்ற ராசாவுக்கு கொள்ளி எடுத்துக் கொடுக்கின்ற மந்திரிகளே உலகம் என்றால், போரை நிறுத்துவது யார் என்ற கேள்வி எளவே செய்யும்.

ஆம், இந்திய பாகிஸ்தான் போர் உடனடியாக முடிவுக்கு வர வேண்டும். ஐ.நா சபையும் உலக நாடுகளும் போரை நிறுத்துவதில் தீவிரம் காட்டும் என யார் நினைத்தாலும் அது மிகப்பெரும் அபத்தம். உண்மையைக் கூறப்போனால், இந்திய பாகிஸ்தான் போரைத் தூண்டுவதிலேயே வல்லாதிக்க நாடுகள் தீவிரம் காட்டுகின்றன. இங்குதான் போரை நிறுத்துவதில் இந்தியாவும் பாகிஸ்தானும் முன் வரவேண்டும்.

இந்தியாவிலிருந்து பிரிந்துசென்ற பாகிஸ்தான் பொருளாதாரத்தில் மிகவும் நலிந்து கிடக்கிறது.

தவிர, தீவிரவாதிகளின் உறைவிடமாகவும் பாகிஸ்தான் ஆகிவிட்டது.

கூடவே பாகிஸ்தானின் ஆட்சி நடைமுறைகளும் ஆரோக்கியமானதாகத் தெரியவில்லை.

ஆம், முன்னாள் ஜனாதிபதிகளுக்காக அங்கு சிறைக் கதவுகள் திறந்திருக்கின்ற நடைமுறை பாகிஸ்தானின் மிகப்பெரும் துயரம்.

அதேவேளை ஆட்சிக்கவிழ்ப்பு, இராணுவ ஆட்சி, ஆட்சியாளர்கள் தப்பி ஓட்டம் என்ற செய்திகளுக்கும் பஞ்சமில்லாத பாகிஸ்தான் தன்வலியும் மாற்றான் வலியும் பற்றி சீர்தூக்கி ஆராய வேண்டும்.

ஆக, யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரண்டு நாடுகளும் விரைந்து சமாதான வேட்கையோடு ஆரத் தழுவுவது அவசியம்.

இல்லையேல், இரண்டு நாடுகளிலும் பொதுமக்களின் அழுகுரல்கள் கேட்டுக் கொண்டே இருக்கும்.

### குருந்தூர் மலையடிவாரத்தில் தமது

# பூர்வீகக் காணியில் விவசாயம் செய்ய முனைந்த தமிழர்கள் கைது அடாவடித்தனத்தின் உச்சம்

## ரவிகரன் எம்.பி காட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு குருந்தூர் மலை அடிவாரத்தில் காணப்படும் தமிழ் மக்களின் பூர்வீக வயல் நிலங்களில் செப்பனிட்டுக் கொண்டிருந்த மூவர் நேற்று குருந்தூர் மலை விகாராதிபதி கல்கமுவ சாந்த போதி தேரர் மற்றும்தொல்லியல் திணைக் களத்தினரின் முறைப்பாட்டின் பேரில் கைது செய்யப்பட்டமைக்கு பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் எம்.பி தமது கண்டனங்களைத் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த மூவரையும் நேரில் சென்று சந்தித்துக் கலந்துரையாடிய தன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர்,

தமிழ் மக்கள் தமது பயிற்செய்கை நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் சுதந்திரம் மறுக்கப்படக்கூடாது. இத்தகைய அடாவடித்தனமான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இந்த விடயத்தினை அறிந்தவுடன் உடனடியாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு வருகைதந்து கைது செய்யப்பட்ட மூன்று பேருடனும் கலந்துரையாடியிருந்தேன்.

அத்தோடு பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் கலந்துரையாடியதில் தமக்கு வவுனியாவில் இருந்து முறைப்பாடு கிடைக்கப்பெற்றதாகவும்தொல்லியல் திணைக் களத்தின் பகுதிக்குள் பண்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டதற்காகவே தாம் குறித்த மூவரையும் கைது செய்ததாகவும் தெரிவித்தார்.

அத்தோடு கைது செய்யப்பட்ட மூவரையும் நாளை (இன்று) நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி விடுவிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இருப்பினும் இந்தக் காணிகள் அனைத்தும் அந்த மக்களுக்குரிய காணிகள் என்பதை பொலிஸ் பொறுப்பதிகாரிக்குத் தெளிவுபடுத்தினேன்.

ஏற்கனவே மக்கள் பயிர்ச்செய்கை மேற்கொண்ட காணிகளில் மக்களைத் தொடர்ந்து பயிர்ச்செய்கை மேற்கொள்ளவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கும் சீர்கேடான செயற்பாடுகளே இங்கு இடம்பெற்று வருகின்றன என்பதையும் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் தெரிவித்தேன்.

இந்த விடயத்திலே தொல்லியல் திணைக்களமானது தமது எண்ணத்திற்கு ஏற்றவாறு எல்லைக்கற்களையிட்டு இக்காணிகளை அபகரித்து வைத்திருந்தால் மக்கள் எங்கே விவசாயம் செய்வது.

மக்கள் தமது காணிகளுக்குள் சுதந்திரமாகச் சென்று பயிர்ச்செய்கை செய்வதற்கான அவர்களது சுதந்திரம் மறுக்கப்படுகின்றது. இவ்வாறான அடாவடிச் செயற்பாடுகளே இந்த நாட்டில் தற்போது இடம்பெறுகின்றது.

குறிப்பாக தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம், ஏ.சி.பாம் ஆகிய மூன்று இடங்களும் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. இவ்வாறு எமது மக்களை மீள்குடியேற்றம் செய்யாமல், இந்த இடங்களில் வேறு குடியேற்றங்களை மேற்கொள்ளப்போகின்றனரோ என்ற அச்சம் இப்பகுதி மக்களுக்கு இருக்கின்றது.

இத்தகைய சூழலில் தமிழ்மக்கள் தமது பூர்வீக விவசாயக் காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொண்டு தமது வாழ்வாதரத்தை ஈட்டுவதற்கு தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

இவ்வாறான அடாவடிச் செயற்பாடுகளில் வனவளத்திணைக்களம்,வனஜீவராசி திணைக்களம், தொல்லியல்திணைக்களம், மகாவலி அதிகாரசபை உள்ளிட்ட அரச இயந்திரங்களால் தமிழ் மக்களின் காணிகள் தொடர்ந்து பறித்துக்கொண்டிருக்கும் செயற்பாடு நிறுத்தப்பட வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கோருகின்றேன் என்றார்.(ம-4,7)

## கொழும்பில் ஒரே நாளில் இருவேறு இடத்தில் தீவிபத்து

கொழும்பில் நேற்று இருவேறு இடங்களில் தீவிபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அந்த வகையில் வொக்ஷால் வீதியில் அமைந்துள்ள இரண்டு கட்டிடங்களில் தீவிபத்து ஏற்பட்டுள்ளதுடன் தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் 06 தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டன.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை வெளியாகாத நிலையில், மின்கசிவினால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

அதேவேளை கொழும்பு ஆமர் வீதியிலுள்ள கடை வரிசையிலும் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

தீயை அணைக்க இரண்டு தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதுடன் தீப்பரவலுக்கான காரணங்கள் சேத விபரங்கள் எவையும் வெளியாகவில்லை. (ம-7)

## வல்வெட்டித்துறையில் நாளை களைகட்டவுள்ள இந்திரவிழா

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலயத் தீர்தோற்சவத்தினத்தன்று மாலை கொடியிறக்கத்தைத் தொடர்ந்து பிரமாண்டமான முறையில் வல்வை மக்களால் வருடாவருடம் முன்னெடுக்கப்படும் இந்திர விழா நாளை திங்கட்கிழமை (12) கோலாகலமாக இடம்பெறவுள்ளது.

இதில் வல்வை முத்துமாரியம்மன், விநாயகர், முருகன் சகிதம் முத்துப் பல்லக்கில் பவனிவரும் ஊறணி முதல் ஊரிக்காடு வரையான 3 கிலோ மீற்றர் நீளத்திற்கு வாழை மரங்கள் மற்றும் வர்ண விளக்குகள் அலங்காரத்துடன் வானுயர் கட்டவுட்டுகள் அம்பிகையை வரவேற்கவுள்ளன.

இந்நிகழ்வில் வானுயர் முப்பரிமாண பொம்மைகள், 100 ற்கும் மேற்பட்ட ராட்சத புகைக் கூண்டுகள், நீர் நடன நிகழ்வுகள், பத்திற்கு மேற்பட்ட மேடைகளில் இசை நிகழ்ச்சிகள், நாட்டிய நடன நிகழ்சிகள், பொம்மலாட்ட நிகழ்வுகள், சிலம்பாட்ட நிகழ்வுகள் போன்ற விஷேட நிகழ்வுகளுடன் நடைபெறவுள்ளது. (ம-4,7)

## நீர்வை கந்தசுவாமியார் இன்று இரதமேறுகிறார்

யாழ்ப்பாணம் - நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி கோவிலின் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

அதிகாலை விசேட அபிசேகங்கள் இடம்பெற்று காலை ஆறுமணிக்கு வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்றதனைத் தொடர்ந்து நீர்வையம்பதி ஆறுமுக சுவாமியார் விநாயகர், உமாமகேசுவரர் சகிதம் எழுந்தருளலைத் தொடர்ந்து காலை 9.30 மணியளவில் முத்தேர் பவனி சிறப்புடன் இடம்பெறவுள்ளது.

நண்பகல் 12 மணியளவில் பச்சை சாத்துதலை தொடர்ந்து இரத அவரோகணம் கோபுர வாசல் விஷேட மண்டபப்படி பூசை, பிராயச்சித்த அபிஷேகம் என்பனவும் இடம்பெறவுள்ளது. (ம-7)

## அலங்கார உற்சவம்

புலோலி வடகிழக்கு உத்திராவத்தை அருள் மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவமானது இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற்று 21 ஆம் திகதி புதன்கிழமை இரவு 7 மணிக்கு பூங்காவன உற்சவமும் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.(3-8,7)

# அரச ஊழியர்களுக்கான பேரிடர் கடன் தொகை உயர்த்த அரசு தீர்மானம்

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கான பேரிடர் கடனுக்கான உச்ச வரம்பு எல்லையை உயர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக புதிய விதிமுறைகளை உள்ளடக்கிய புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அரச நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால், அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர் கள் மற்றும் திணைக்கள தலைவர்களை அறிவுறுத்தும் வகையில் வெளியிடப்பட்ட இந்த சுற்றறிக்கை கடந்த 2025.05.01 முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதில், 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் மூலம் அரச ஊழியர்களின் குறைந்தபட்ச ஆரம்ப சம்பளம் உயர்த்தப்பட்டதை கருத்தில் கொண்டு, அரச ஊழியர்களுக்கு பேரிடர் கடன் வழங்குவதற்கான உச்ச வரம்பு எல்லையை தற்போதுள்ள 250,000 ரூபாவில் இருந்து 400,000 ரூபாவாக உயர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-8)

# பெரமுனவின் செயற்பாட்டு பிரதானியாக ஜோன்ஸ்டன்

(கொழும்பு)



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் புதிய செயற்பாட்டு பிரதானியாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சியின் விசேட கூட்டத்தின் போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களை நியமிப்பதற்காக முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகேவின் தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக, உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியை நிறுவுவதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கான குழுவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி நியமித்திருந்தது.

இதேவேளை, கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், புதிய செயற்பாட்டு பிரதானி ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக்க ஆகியோர் இந்தக் குழுவின் உறுப்பினர்களாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)


**வலி-கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)**

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்படிவத்தை சங்க வேலை நாட்களில் தலைமைக்காரியாலயத்தில் ரூபா 10.00 இனைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் யாவும் "தலைவர் வலி-கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் நீர்வேலி" எனும் முகவரிக்கு 25.05.2025 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கவும்.

**பதவிப் பெயர்- கணக்காளர் (01)**

◆ **சம்பள குறியீட்டு இல** :- 104/09(கூ.வே.ஆணைக்குழுவின் சு.நி.இல02/ 2022இன்படி)

◆ **சம்பள அளவுத்திட்டம்** :- 20200-250X10-260X10-25300
242400-3000×10-3120X10-303600
சு.நி.இல02/2022இன்படி)

**அங்கீகரிக்கப்பட்ட தகுதி :**

அ. கூட்டுறவு ஊழியர் 10ஆவது சம்பளத் திட்டப்பதவியில் கணக்காளர் / உள்ளகக் கணக்காய்வாளர் / கணக்கு பதிவாளர் பதவியில் ஆகக்குறைந்தது 02ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 11ஆவது சம்பளத்திட்ட பதவியில் உள்ளகக் கணக்காய்வாளர்/ கணக்கு பதிவாளர் கணக்கு/கணக்காய்வு எழுதுனர் பதவியில் ஆகக்குறைந்தது 04ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ. இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்கு சமனான தகைமை/ மாகாண கூட்டுறவுப்பயிற்சி நிறுவனத்தினால்/ தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி

**அல்லது**

இ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03ஆண்டு கால அனுபவம்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03ஆண்டுகால அனுபவம்/

கா.பொ.த உயர்தரப்பரீட்சையில் கணக்கியல் உட்பட 03பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வுத் துறையில் ஆகக் குறைந்தது 04ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 04ஆண்டு கால அனுபவம்.

**பதவிப் பெயர் தொழிலாளி (03)**

சம்பளக் குறியீட்டு இல :-318/17(சு.நி.இல02/2022இன்படி)
சம்பள அளவுத்திட்டம் :-16515-130X10-145X10-19265
198180-1560X10-1740X10-231180
(சு.நி.இல02/2022இன்படி)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமை:**

05ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**பொதுவானது**

அ. ஏனைய கூட்டுறவுச் சங்கங்களில் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை அச்சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும்.

ஆ. வயதெல்லை 18 வயதிற்கும் 45வயதிற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

**மேலதிக தொடர்புகளுக்கு -076 711 1168/ 077 923 2462**
**தலைவர், வலி-கிழக்கு வாழைக்குலை,**
**உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி.**

(C-2936)



## கல்யாணமாலை

### சர்வதேச இலவச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1994- இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி-பா:36
உயரம் : 5'11"
தகைமை/தொழில்: A/L,சாரதி
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15435

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:சுவாதி
கி-பா-:39 1/4
உயரம் :5'4"
தகைமை/தொழில்-B;Tech,Engineer
எதிர்பார்ப்பு:Engineer, IT Field , BSc graduates
தொ.இ: B/15436

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
உயரம் :5'5"
தகைமை/தொழில்:O/L,Painting
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15437

பிறப்பு: 1975- இந்து
நட்சத்திரம்:உத்தரம்
12இல் செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்:IT Diploma, Banker
எதிர்பார்ப்பு: தகுதியானபெண், விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/15438

பிறப்பு: 1988- இந்து
நட்சத்திரம் :மகம்
தகைமை/தொழில்: கடை
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15439

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்: கேட்டை
7இல் செவ்
உயரம் : 5'2"
தகைமை/தொழில்: MBBS,Doctor
எதிர்பார்ப்பு: Doctor , Engineer
தொ.இ: G/15461

பிறப்பு:1996-இந்து
நட்சத்திரம்:சதயம்
7இல்சூரிசெவ்
கி-பா: 95 உயரம் : 5'
தகைமை/தொழில்: MLT
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/15462

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-ரேவதி
கி.பா : 06
உயரம் -5'4"
தகைமை/தொழில்: BSc,MSc ,Engineer (pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15463

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்:சுவாதி
கி.பா:43 1/4
உயரம்: 5'4"
தகைமை/தொழில் :MBBS,Doctor
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/15465

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்:உத்தராடம்
8இல்செவ்
கி.பா: 94 உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc,Senior Opreation Analyst
எதிர்பார்ப்பு: Only London(PR)
தொ.இ: G/15466

**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 076 097 3120**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**

## வெசாக்கை...

மன்னிப்பு வழங்கப்படும் கைதிகளில் நான்கு பெண் கைதிகளும் அடங்குவதாகச் சிறைச்சாலைகள் ஆணையாளர் காமினி பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை வெசாக் போயா தினத்தை முன்னிட்டு சிறைக் கைதிகள் மே 12ஆம் மற்றும் 13ஆம் திகதிகளில் பார்வையாளர்களைச் சந்திக்க வாய்ப்பு வழங்கப்படும் எனச் சிறைச்சாலை ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வாய்ப்பு காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கிடைக்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ம-7,4)

## இந்தியா - பாகிஸ்...

பிரதமர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மத்தியஸ்தத்தால் நடத்தப்பட்ட நீண்ட இரவுப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக போர்நிறுத்தம் ஏற்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இது தொடர்பில் இந்தியா கருத்து தெரிவிக்கவில்லை என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் 22ஆம் திகதி காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர்.

கொடூரமான இந்தத் தாக்குதலுக்குப் பதிலடியாகக் கடந்த புதன்கிழமை நள்ளிரவில் 'ஒப்பரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பாகிஸ்தானின் 9 தீவிரவாத முகாம்களை இந்திய இராணுவம் அழித்தது.

இந்நிலையில் பாகிஸ்தானும் தொடர் பதில் தாக்குதலை நடத்தி வந்த நிலையில் தற்போது போர் நிறுத்தத்திற்கு இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-7,4)

## உணவக உரிமை...

(வயது - 54) என்பவரே தாக்குதலில் காயமடைந்துள்ளார்.

அச்சுவேலி வைத்தியசாலை வீதியூடாக தனது கடையினைத் திறப்பதற்கு நேற்று சனிக்கிழமை அதிகாலை சென்ற வேளை குறித்த வீதியில் கார் ஒன்றில் காத்திருந்தவர்கள் இடையில் வழிமறித்து பொல்லுகளால் கடுமையாக தலை, கை என்பவற்றில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதல் நடத்திய இருவர் தம்மை அடையாளம் காணாதவாறு முகத்தைத் துணியால் கட்டி மறைத்திருந்ததாகத் தெரியவருகிறது.

காயமடைந்தவர் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,4,33)

## இலங்கைத்...

றார்கள் என்று ஒரு செய்தி பரப்பப்பட்டு வந்தது.

இவ்வாறான ஒரு காலச் சூழலில் பிரதேசத்தின் அபிவிருத்தியை முன்நிறுத்திய ஒரு தேர்தலில் மக்கள் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி வாக்களித்து வெற்றிபெறச் செய்துள்ளனர்.

இதனூடாக வடக்குக் கிழக்கில் தென் இலங்கை இனவாதிகளுக்கு இடம்கொடுக்கப்படாது என்பதை ஆட்சியாளர்களுக்கு தமிழ் மக்களால் உணர்த்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவது காலச் சூழலுக்குத் தேவையான ஒன்றாகும்.

இதனால் தமிழ்த் தரப்பு ஆட்சி அமைக்க நாம் தமிழ் அரசுக் கட்சிக்கும் கொள்கை நிலைப்பாட்டுடன் நின்று ஆதரவைக் கொடுக்கப் பின் நிற்கமாட்டோம்" என்றார். (ம-7,4,33)

(மேலும் ஒரு செய்தி உள்ளே)

## தையிட்டியில்...

டுக்கப்படவுள்ளது.

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கெதிரான போராட்டம் இன்று மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி நாளை மாலை 6 மணிக்கு நிறைவடையும். அனைவரையும் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். (ம-7,4,33)

## தமிழ்க் கட்சிகளே...

துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடக சந்திப்பொன்றை முன்னெடுத்து இவ்வாறு கூறிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் வழங்கிய தீர்ப்பின்படி ஆட்சி அதிகாரத்தை தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாக ஓரணியில் இணைந்து செயற்படுத்துவது அவசியம். இதே நேரம் தமிழரசுக் கட்சி அதிக ஆசனங்களை எடுத்துக் கொண்டாலும் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை அவர்களுக்கு இருக்கவில்லை.

இதனால் தமிழ் மக்களின் நலன் கருதி ஏனைய தரப்பினருக்கும் விட்டுக்கொடுப்புகளுடன் செயற்பட தமிழ்த் தரப்புகள் தயாராக வேண்டும். இதுவே மக்களின் எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது. இதே நேரம் தற்போது பெரிய, சிறிய என்ற நிலையில் எந்தவொரு கட்சியும் இல்லை. அனைத்தும் சமமான நிலைப்பாட்டிலேயே இருக்கின்றன என்றார். (ம-7,4)

## பொது...

லாளர் எம்.ஏ. சுமந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழரசுக்கட்சியின் அரசியல் குழுக்கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

உள்ளூராட்சி தேர்தலில் 58 சபைகளில் தேர்தலில் போட்டியிட்டோம். ஆகக் குறைந்தது 35 சபைகளில் நாம் தனிப் பெரும் கட்சியாக உறுப்பினர்களைப் பெற்றுள்ளோம். ஆறு சபைகளில் அறுதிப் பெரும்பான்மையோடு வெற்றி பெற்றிருக்கிறோம். அந்தச் சபைகளில் தவிசாளர், உபதவிசாளரைத் தெரிவு செய்யும் பொறுப்பு கட்சிக்கு மட்டுமே இருக்கும். கட்சி சார்ந்து பொதுச் செயலாளர் அந்தப் பெயர்களை அனுப்பி வைப்பார். எமக்காக வாக்களித்த மக்களின் நம்பிக்கை வீண் போகாது. நாம் பொறுப்பெடுக்கும் சபைகளை திறமையுடனும் நேர்மையுடனும் நிர்வகிப்போம்.

ஒரு சபையில் குறித்த ஒரு கட்சிக்கு கூடுதலான ஆசனங்கள் இருந்தால் அந்தக் கட்சிக்கு நிர்வாகத்தை அமைக்கக்கூடிய ஒரு உரிமை பொதுவாக இருக்கும். அந்தவகையில் இந்த 35 சபைகளுக்குமான தவிசாளர், உபதவிசாளர்களை நாங்கள் முன்னிறுத்துவோம்.

மற்றைய கட்சிகள் இந்தப் பொதுவான கோட்பாட்டிற்கு இணங்கி நாம் முன்னிறுத்துகின்ற வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டும் என்று தன்மையாகக் கேட்டுக்கொள்கிறோம். சில சபைகளில் விதிவிலக்கு ஏதும் இருந்தால் அது தொடர்பில் ஆராய்வோம்.

பொதுவான வகையில் இவ்வாறான ஒரு நிலைப்பாட்டிற்கு வந்துள்ளோம். யாழ்.மாநகர சபைக்கும் இது பொருந்தும் என்றார். (ம-7,4,250)


மஹஜன சம்பத
திகதி 2025.05.10
சீட்டிழுப்பு இலக்கம் 5827
ஆங்கில எழுத்து L | வெற்றி இலக்கங்கள் 6 7 0 7 9 1
அத சம்பத L 0 7 9 1
சீட்டிழுப்பு இலக்கம் 402
National Lotteries Board

தன நிதானய
திகதி -2025.05.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1857
C 16 20 41 52 C
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
Double Chance 85135

மெகா பவர்
திகதி 10/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2175
S 18 03 18 50 73
Double Chance

ජය JAYA
திகதி 2025.05.10
சீட்டிழுப்பு இலக்கம் 095
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
N 7 7 4 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4069
சீட்டிழுப்பு திகதி 10.05.2025
A 11 13 22 27
A
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.10
சீட்டிழுப்பு இலக்கம் 1136
கும்பம் 09 18 39 44 கும்பம்
30834 தேசிய லொத்தர் சபை 15

உத்தியோகபூர்வ முடிவுகள்
10.05.2025 வெற்றி வாரம் 535
ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கம் 1 3 8 8 5 7
56982
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.37,039,938.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2801
சீட்டிழுப்பு திகதி 2025.05.10 தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 37 39 74 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,271,368.80
DLB

சனிதா
திகதி 10.05.2025 வெற்றி வாரம் 4962
வெற்றி இலக்கங்கள் 22 23 49 68 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,306,192.00
ரூ.100,000/- பணப்பரிசு 87337
DLB

சசிரி
680
10.05.2025 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 26 29 31
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4513
சீட்டிழுப்பு திகதி 10.05.2025 தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 11 31 42 60 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,231,079.20
166581
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 07 06 35 43 47
சுப்பர் இலக்கம்
1977
10.05.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.574,575,727.80
DLB

ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2627
சீட்டிழுப்பு திகதி: 2025.05.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,596,163.20
12 36 58 61 S
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 136903
DLB

## Village Hotel
**Bus Booking (A/C Bus)**

பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு

இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக
www.villagehotel.lk
**077 544 8503**
(3392)

## கனடா - வரி இல்லாமல்
### விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3970/- |
| 11-16 Kg | 2800/- |
| 21-30 Kg | 2640/- |

நிபந்தனைகளுடன்

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/- | Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 / 076 822 6237
(C-2940)

## AL - PHYSICS CLASS
மாதமொரு முறை ஒவ்வோர் அலகாக செவ்வாய் காலை 8 - 12 மணி வரை பௌதிகவியல் Seminar நடைபெற உள்ளது.
பதிவு செய்பவர்களுக்கு இலவச கையேடு வழங்கப்படும்.
20.05 – அலகு 1 17.06 – அலகு 2
**Model Paper, Theory Class இற்கும்**
**Ranjit Sir B.Sc, P.G.D.E, S.L.P.S I**
வேம்படி மகளிர் பாடசாலைக்கு அருகே
**077 600 4896**
(4126)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## 50 ஆண்டுகால சேவையில்
**E-Son's மேன்மை**
**PARLOUR SERVICE**
100 பேர் அமரக்கூடிய விசாலமான மண்டபம்
**ஈ - சன்ஸ்**
148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 2695 / 077 429 0613**
(C-2907)

## பணியாளர் தேவை
ஆண் ஊழியர்கள் மட்டும்
பணி வெற்றிடங்கள்
- கணக்காளர்
- விற்பனை உதவியாளர்

வேலை நேரம், சம்பளம் போன்றவை நேரில் கலந்துரையாடப்படும்.
T.P: **077 542 5720**
26, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-2939)

## Group Classes English & ICT
- A/L General English (School Syllabus)
- Grade 6 - 11 (School Syllabus)
- ICT for G.C.E O/L & A/L (Theory and Practical)

ஆரம்பம்: 15.05.2025
விபரங்களுக்கு:
076-8976665
070-6867695
**APSS International**
188, K.K.S Road, Chunnakam
(1123)

## கடைத்தொகுதி விற்பனைக்கு
இராமநாதன் வீதியில் (பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில்) அமைந்துள்ள கடைத்தொகுதியுடன் சேர்ந்த காணி விற்பனைக்கு உண்டு.
மேலதிக விபரங்களுக்கு **+6586783788** எனும் இலக்கத்திற்கு வட்சப்பில் தொடர்பு கொள்ளவும். (தரகர் தேவையில்லை).
(4134)

## காணி விற்பனைக்கு
வடமராட்சி மந்திகை சிலையடிப் பகுதியில் பிரதான வீதியுடன் கூடிய 10 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
பகுதிகளாகவும் பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு :
**077 500 2162**
(4128)

## விற்பனைக்குண்டு
அரைக்கும் ஆலைக்குரிய இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. மாலுசந்தி அல்வாய் வீதியில்.
தொடர்புகளுக்கு :
**077 604 7786**
(1122)

## மரண அறிவித்தல்



மலர்வு 27 - 06 - 1951
உதிர்வு 07 - 05 - 2025

### திருமதி தவராஜசிங்கம் கமலாம்பிகை

விராங்கொடை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவராஜசிங்கம் கமலாம்பிகை அவர்கள் (07.05.2025) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் வீரசிங்கம் - சிவஞானம் தம்பதியரின் மூத்த மருமகளும் வீரசிங்கம் தவராஜசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ரஜினி, தர்மினி (லண்டன்), ஜீவரஞ்சினி, தனுசாந்தன் (லண்டன்), நிஷாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் யோட்ஸ் அன்ரன் (அன்ரனி - இலண்டன்), யூவேட், கலையரசி, பிரியங்கா (பிரியா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்ஸ்சன் (இலண்டன்), சர்மியா, பிரவீன் (இலண்டன்), யுவான்ஸ்சன், டிதுர்சன், அருன்ஞா, வர்மன், அபிஷான், ரித்திக், அனிகா (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் கனேஸ்வரி, காலஞ்சென்ற சரஸ்வதிஅம்மா, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயராஜசிங்கம், சூரியகலாதேவி, காலஞ்சென்ற லலிதாதேவி மற்றும் விஜியசிங்கம், ராஜசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி, தெல்லிப்பழை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
(4146)

## காணி விற்பனைக்கு
சுதுமலை அம்மன் ஆலயத்தில் இருந்து மிக அண்மையில் பிரதான வீதியில் இருந்து 2 ம் காணி 50m 1 பரப்பின் விலை 60,00000/=
**076 428 4896**
(4130)

## வீட்டு வேலைக்கு பெண் உதவியாளர் தேவை
யாழ். நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு சமையல் உதவிகள் செய்வதற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. வயது : 45 இற்கு மேல் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
**076 897 2637**
(4148)

## கடை வாடகைக்கு
மானிப்பாய் வீதி, பள்ளிவாசலுக்கு முன் 20 அடி அகலமும் 35 அடி நீளமும் கொண்ட கடை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
**077 617 6413**
(4145)

## மணமகள் தேவை
யாழ். RC, 1982 இல் பிறந்த கொழும்பில் வேலை செய்யும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு :
**076 041 0334**
(1118)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 219/= | Max 10Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 258/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 420/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg கீரி சம்பா அரிசி | - 260/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் (உள்நாடு) | - 217/= | |
| 1Kg கடலை | - 405/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 215/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 245/= | |
| 1Kg அரிசிமா | - 265/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 265/= | |
| 700g சுபோஷா(திரிபோஷா) | - 570/= | ~~590/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |
| 01 லங்கா கறிசோயா | - 115/= | ~~140/=~~ |

400g Anchor 1040/= ~~1100/=~~



1Kg சன்லைட் பவுடர் 280/= ~~320/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
(1124)
Happy Supermarket
0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# யாழ் மண்ணில்
# Jaffna Edu Fiesta 2025

40 லட்சம் வரையிலான புலமை பரிசில்




## உங்கள் வெளிநாட்டுக் கல்விக் கனவை நனவாக்க ஓர் அரிய வாய்ப்பு

அனைத்து மாணவர்களுக்கும்
விமானப் பயணச்சீட்டு இலவசம்!

வீசா நேர்காணல் இல்லை

வெற்றிகரமான 1000ற்கும் மேற்பட்ட மாணவர் வீசாக்கள்

17 MAY 2025

VALAMPURI HOTEL, JAFFNA

9.30AM - 4.30PM

076 822 2022 / 021 222 2893

SYNERGY CONSULTANT

(063)




# சிறுவர் அரங்கம்

## அன்னப்பறவையும் புறாவும்



ஒரு நதிக்கரையில் அன்னப்பறவை ஒன்று வாழ்ந்து வந்தது. அது பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும்.

மற்றைய பறவைகள் எல்லாம் அன்னப் பறவையைப் பார்த்து அதன் அழகை ரசிக்கும். அந்த அளவுக்கு அது அழகான பறவையாக இருந்தது. அந்த அன்னப்பறவை எல்லோரிடமும் நட்பாகவும் மற்றவருக்கு உதவி செய்யும் குணம் உடையதாகவும் இருந்தது.

அந்த அன்னப்பறவைக்கு ஒரு புறா நண்பன் இருந்தான். அன்னப்பறவை எப்போதுமே மறறைய பறவைகளிடம் நாம் மற்றவருக்கு உதவி செய்ய வேண்டும், எல்லோரிடமும் அன்பாக இருக்க வேண்டும் என்று அறிவுரை சொல்லிக் கொண்டே இருக்கும். ஒரு நாள் வேட்டைக் காரன் ஒருவன் காட்டில் வேட்டையாட வந்திருந்தான். அவனுக்கு வேட்டையாட எந்த ஒரு பறவையும் விலங்கும் கிடைக்கவில்லை.

அவன் கோபத்தில் அங்கேயும் இங்கேயும் சுற்றிக் கொண்டே இருந்தான். வெயிலின்தாக்கமும் அதிகமாக இருந்தது. கடும் வெயிலினால் அந்த வேட்டைக் காரனும் களைப்படைந்து ஒரு மரத்தடியில் போய் ஓய்வெடுக்க அமர்ந்தான். வேட்டைக்காரன் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த அதே மரத்தின் கிளையின் மேலே அன்னப் பறவை உட்கார்ந்து இருந்தது.

அன்னப்பறவை வேட்டைக்காரன் கீழே களைப்பாக இருப்பதைப் பார்த்து மேலே கிளையிலிருந்து கொண்டு அதன் சிறகினால் அவனுக்கு காற்று வீசிக் கொடுத்து கொண்டு இருந்தது. அந்தக் காற்றின் குளிர்ச்சியால் அந்த வேட்டைக் காரன் அப்படியே தூங்கி விட்டான். அப்போது புறா அங்கே வந்து அன்னப் பறவையிடம் கேட்டது, "நண்பா உனக்கு இவ்வளவு பெரிய மனசா. இந்த வேட்டைக்காரன் மற்றைய பறவைகளை எல்லாம் வேட்டையாடுபவன். நமக்குத் தீங்கிழைப்பவனுக்கு நீ உதவி செய்கிறாயே" என்று கேட்டது.

அதற்கு அந்த அன்னப்பறவை சொன்னது. "நண்பா வேட்டையாடுவது அவனுடைய தொழில், அதனால் அவனை நாம் தவறு சொல்ல முடியாது. இப்போது அவன் மிகவும் களைப்பாக இருக்கிறான். அதனால் தான் நான் என் சிறகினால் அவனுக்கு காற்று வீசிக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்" என்றது.

புறாவும் அப்படியா சரி சரி என்று சிரித்துக் கொண்டே அந்த வேட்டைக்காரன் மூஞ்சியில் எச்சம் போட்டு விட்டு அங்கிருந்து பறந்தது. முகத்தில் எச்சை விழுந்தவுடனே வேட்டைக்காரன் கண் விழித்துப் பார்த்தான். கண் விழித்துப் பார்த்தபோது மேலே கிளையில் அன்னப்பறவை உட்கார்ந்து இருந்தது.

அந்த வேட்டைக் காரன் அன்னப் பறவைதான் தன் முகத்தில் எச்சமிட்டது என்று கோபத்தில் தன் அம்பை எடுத்து அந்த அன்னப் பறவை மீது எய்தான். அந்த அன்னப்பறவையும் துடிதுடித்து கீழே விழுந்து இறந்தது.

பின்னர் வேட்டைக்காரன் அந்த அன்னபறவையை தூக்கிக் கொண்டு தன் வீடு திரும்பினான். தன்னுடைய நண்பன் புறாவினாலே அந்த அன்னப் பறவையின் உயிர் பிரிந்து விட்டது.

நீதி: நாம் சில பிரச்சினைகளை நம் நண்பர்களாலே சந்திக்க நேரிடுகிறது.